Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 307 சித்திரை. April. 2022

Orientalisch
Textilien & Schmuck
மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து ஆடைகளும் 35% முதல் 60% வரை
32 ஆவது ஆண்டு நிறைவு
ஏப்ரல் 01 முதல் 30 வரை
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund | Tel:0231 162377

# வெற்றிமணி
Vettimaniy

ESTD 1950
28TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

## ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்

அன்னபூரணி

வீடு
– கவிதா லட்சுமி

Dr.IN

யேர்மனியில் தேர்க்காலம் 2022



இளம் கலைஞர் தர்ஷாஹினி ஜெகநாதன்

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள்







# ஆசையாக வடிக்கும் மணற் சிற்பங்கள் ஆசையை அறுக்கவும் கற்றுத்தரும்



● மாதவி

கடற்கரையில் சிறுவயதில் பட்டம் விடுபவர் ஒரு புறம், கடல் அலையோடு விளையாடுபவர்கள் ஒரு புறம். என்னதான் விளையாடினாலும் அந்த மணலில் வீடு கட்டி விளையாடாமல் எவரும் வீடுதிரும்புவதில்லை.

காலை மணலுக்குள் புதைத்து நிற்க மற்றவர் காலுக்கும் மேல் மண்ணை மூட, பின் காலை மெல்ல எடுக்க ஒரு குகை வீடு அங்கு அழகாக அமையும்,

மணல் சிற்பம் என்பது மணலைக் கொண்டு கலைத்து வடிவமாக உருவாக்கப்படும் வடிவங்களைக் குறிக்கும். மணற்கலை என்பது மணற்சிற்பங்களாகவோ, மணல் ஓவியங்களாகவோ காணப்படலாம். சிறிய அளவில் செய்யப்படும் மண் கோட்டைச் சிற்பங்களும் இதனுள் அடங்கும். மண்ணும் நீரும் மணற்சிற்பம் உருவாக்க அடிப்படையாகத் தேவைப்படும். கடற்கரையில் இவையாவும், இலகுவாக, இலவசமாக கிடைக்கும்.

இங்கு மணல் வீடுகட்டியும், பொம்மை உருவங்கள் வடித்தும், மகிழ்வதும் உண்டு. சில சமயங்களில் நாம் செய்தது நமக்கே என்ன என்று தெரியாதபோதும், அம்மா அப்பா அட சரியா இது முயல் போலவே இருக்கென்று, எமது கலை ஆர்வம் வளர உற்சாகப்படுத்துவார்கள். உண்மையில் சிறுவயதில் நாம் சாதிக்க முடியாத பல வற்றை இப்போது சிறுவர்களும், பெரியவர்களும், இந்த மணல் சிற்பத்தில் பெரும் சாதனைகள் புரிகிறார்கள். இத்தோடு இப்போ மணற் சிற்ப போட்டிகள் பலவும் கடற்கரை ஓரங்களில் நடைபெறவே செய்கின்றன.

கடற்கன்னி, பாதி பெண், பாதி மீன் வால், என பலமணி நேரம் இரவு பகலாக செய்து முடிக்கின்றார்கள். கடவுளின், திருவுருவம், அரசன், அரசி, அன்னை தெரேசா, காந்தி அடிகள், இப்படி மனங்கவரும் மனிதரையும் மணற்சிற்பமாக வடிக்கின்றனர்.

பல மணி நேரத்தை விழுங்கிடும் இந்த மணற்சிற்பத்தின் ஆயுளோ மிகக்குறைவு. யோசித்து பாருங்கள் காந்தி அடிகளின் மணல்



உருவச்சிற்பம், அல்லது ஒரு இளவரசியின் அலங்காரச் சிற்பம் எவ்வளவு நுணுக்கமாக இருக்கும்.

நீண்டகாலம் நிலைத்து இருக்கும் ஒன்றிற்கு, நாம் நேரத்தை அதிகம் செலவு செய்தல் அர்த்தம் உள்ளது. இதோ வெறும் மணிக்கணக்கில் இருப்பற்கு இவ்வளவு நுணுக்கம் எதற்கு, கலைஞர்களது திறமைகள் வீணடிக்கப்பட்டதாக அல்லவா எண்ணத் தோன்றுகின்றது.


உண்மையில் அப்படி என்றால் ஏன் இப்படி மணற்சிற்பம் செய்கிறார்கள்.

சிறுவயதில் நம் விளையாட்டாகவும், வளர்ந்தபின் போட்டியாகவும், நாம் செய்துகொண்டுதான் இருக்கிறோம். அப்படி என்றால், குறுகிய வாழ்வுகொண்ட, அந்த மணற்சிற்பங்கள் எமக்கு சொல்லும் பாடம்தான் என்ன.


எம்மை விடுங்கள், ஆசையத்துறக்க முயலும் நேபாளத்தில் இருக்கும் பௌத்த துறவிகளுக்கும், இந்த மணற் சிற்பங்களை செய்யவே, முதலில் பயிற்சி வழங்குவார்கள்.

துறவிகள் சிறப்பான, பிறர் மெச்சும்படியான சிற்பங்களை, வடிப்பார்கள். ஆனால் அவர்கள் வடித்த சிற்பம் அற்புதமாக வந்தாலும், அதனை பலர் பார்ப்பதற்கு முன்பே அழித்து விடுவார்களாம். இதனால் துறவிகளுக்கு இந்த அழகிய வாழ்வு

28 ஆம் பக்கம் பார்க்க...

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 307



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276



# எதிரணியின் 'gotta go home' போராட்டத்தை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது?



கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலகி ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என எதிரணி கோரியுள்ளது, இந்தக் கோரிக்கையை முன்வைத்த ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பி.யும் ஆரம்பித்துள்ளன. gotta go home என்ற கோஷத்துடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு–வருகின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை இதனையிட்டு அலட்டிக்கொள்ள அவர்கள் தயாராகவில்லை என்பதை உணரமுடிகின்றது,

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அதிகரித்துவரும் மக்களின் அதிருப்தியை கடந்த செவ்வாய்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி வெளிப்படுத்தியிருக்கின்றது. விலைவாசி பலமடங்காக அதிகரித்திருப்பதும், அத்தியவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் மக்கள் மத்தியில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு தக்க சமயத்தில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் பேரணியை நடத்திமுடித்திருக்கின்றது.

ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிடுவதுதான் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் இலக்கு எனவும், அதனை தடுக்க முற்படுவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் எனவும் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை ஒன்றைக் கொடுத்திருந்தார்கள். அதனையடுத்தே – ஜனாதிபதி செயலகத்தில் அன்று மாலை நடைபெறவிருந்த நிகழ்வுகள் அவசரமாக இரத்துச் செய்யப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடைபெறவிருந்த சந்திப்பும் ஒத்திவைக்கப்பட்டது, ஜனாதிபதி உட்பட முக்கிய அதிகாரிகள் அங்கிருப்பதையும் தவிர்த்துக்கொண்டார்கள். மக்களின் சீற்றத்தை கட்டுப்படுத்த முடியாததாக இருக்கும் என்பதை அரச தரப்பு புரிந்துகொண்டிருந்தது.

ஜனாதிபதி செயலக முன்வாயிலை தகர்த்துக்கொண்டு உள்ளே செல்ல முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை அதிரடிப்படையினர் தடுத்துவிட்டார்கள். ஜனாதிபதி செயலக உள்வாயில்வரை ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றிருப்பது இதுதான் முதல் முறை. இது ஒரு எச்சரிக்கையும் கூட. ஆனால், மக்கள் மத்தியில் காணப்படும் இந்த சீற்றத்தை எதிரணி எவ்வாறு பயன்படுத்தப்போகின்றது என்பதில்தான் அடுத்த கட்டம் உள்ளது. மாவட்டம் தோறும் ஆர்ப்பாட்டப்பேரணிகளை இதேபோல நடத்துவது ஐக்கிய மக்கள் சக்தியின் உபாயமாக இருக்கின்றது. இதன்மூலமாக நாடு முழுவதிலும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தலாம் என அவர்கள் கணக்குப் போடுகின்றார்கள்.

தலைநகரில் பல்லாயிரக்கணக்கானோரைத் திரட்டி ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை, அதிஉயர் பாதுகாப்பு வலயமாக உள்ள ஜனாதிபதி செயலகம் வரையில் நடத்த முடியும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி உணர்த்தியிருக்கின்றது. அத்தியவசியப் பொருட்களின் விலை உயர்வு, தட்டுப்பாடு என்பவற்றை முன்னிலைப்படுத்தியே இந்த ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தப்பட்டதால், மக்களைத் திரட்டுவது இலகுவானதாக இருந்துள்ளது. வாழ்வாதாரப் பிரச்சினையால் சீற்றத்துடனிருந்த மக்கள் பெருமளவிளில் தாமாகவே முன்வந்து பேரணியில் இணைந்துகொண்டார்கள்.

ஜனாதிபதி வீட்டுக்குச் செல்ல வேண்டும் gotta go home என்ற கோசமே இங்கு முன்னிலைப்படுத்தப்பட்டது. ஆளும் மொட்டு அணியில்

29 ஆம் பக்கம் பார்க்க...



# யேர்மனியில் தேர்க்காலம் ௨0௨௨



## ஆலயங்களின் கொடியேற்றம் – தேர் உற்சவங்கள் 2022

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)

**வூப்பெற்றால் ஶ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
Tel: 0202 479 60 17
கொடி : 06.05.2022 - தேர்: 14.05.2022
Hünefeld Str 63b
42282 Wuppertal

**சுட்காட் ஶ்ரீசித்திவிநாயர் கோவில்**
Tel:0176 434 424 39
கொடி: 11.06.2022 - தேர்: 19.06.2022
Lehmfeld Str 18
70374 Suttgart

**கற்றிங்கன் ஶ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02324 27061, 01577 36 63 939
கொடி: 11.06 2022 - தேர்: 19.06.2022
Gottwald Str 23
45525 Hattingen.

**ஹம் ஶ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
Tel: 02388 302 223
கொடி: 13.06.2022 - தேர்: 26.06.2022
Siegenbeck Str 4-5, 59071 Hamm

**எசன் ஶ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 02.07.2022-
தேர்: 10.07.2022
2021Kloster Str 49 a, 45149 Essen

**டோட்மூண்ட் ஶ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 07.07.2022 - தேர்:10.07.2022
Klefer Str 24, 44225 Dortmund

**கிறிவீல்ட் ஶ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 02151 565 00 45
கொடி: 02.07.2022 - தேர்: 10.07.2022
Girmesgath 95, 47803 Krefeld

**பிறாங்போட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 069 979 45 618
கொடி: 03.07.2022 - தேர்: 16.07.2022
Adelbert Str 61-63 | 60486 Frankfurt/M

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
Tel: 02261 5015 964, 0176 3015 2913
கொடி: 09.07.2022 - தேர்: 17.07.2022
Industrie Str 7; 51643 Gummersbach

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்லழகர் ஆலயம்**
Tel: 02381 291 03
கொடி: 16.07.2022 - தேர்: 04.07.2022
Roon Str 2 a; 59065 Hamm

**சுட்காட் சித்திவிநாயகர் அலயம்**
Tel: 0711 470 30 47
கொடி: 22.07.2022 தேர்: 31.07.2022
Waiblnger Str 30; 70372 Suttgart

**சுவெற்ரா கனக துர்க்கா அம்பாள்ஆலயம்**
Tel: 02304 16721
கொடி: 23.07.2022 - தேர்: 31.07.2022
Roberte koch Str 5 a, 58239 Schwerte

**கிஸ்கெம்ரெக் கனகதுர்க்கஅம்பாள் ஆலயம்**
Tel: 07021 807 43 99
அலங்காரத் திருவிழா: 30.07.2022 -
தேர்: 07.08.2022
Alleen Str 18-20 73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் அலயம்**
Tel: 02381 162 686
கொடி: 31.07.2022 - தேர்:07.08.2022
Ferdinand poggel Str25, 59065 Hamm

**கவுஸ்கொம் முல்கைம் முருகன் ஆலயம்**
Tel: 0152 537 924 93
அலங்காரத் திருவிழா: 12.08.2022 - தேர் 21.08.2022
Hauskam Str 58; 45476 Muelheim/Ruhr

**பேர்லின் மயூரபதி முருகன் அலயம்**
கொடி: 02.08.2022 - தேர்: 25.08.2022
Blaschko Alle 48; 12355 Berlin.

**ஹம் வெங்கடேஸ்வரப்பெருமாள் கோவில்**
Tel: 02381 42 66 420
அலங்கார உற்சவம்: 25.08.2022 -
தேர்: 04.09.2022
Nassauer Str 20; 59065 Hamm






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# வீடு

சித்திரம்: கண்ணா

**விலையுயர்ந்த பொருட்கள் ஒன்றோ இரண்டோ மிக நேர்த்தியாக வைக்கப்படுவதும், விளக்குகளும் அது போலவே இருப்பதும், உயர் நட்சத்திர விடுதிகளின் அறைகளைப் போலவே வீடுகளும் இருக்க வேண்டுமென்ற விளம்பரங்களின் பரிமாணங்கள் தாம்.**



இப்போதெல்லாம் வீடுகள் மிகவும் வெறுமையுடன் இருப்பதாகவே உணர்கிறேன்.

இங்கு, புதிது புதிதாய் கட்டப்படும் வீடுகள் எல்லாம் வெள்ளை நிறச் சுவர்களையே அதிகமாக் கொண்டிருக்கின்றன. பொருட்களைக் குறைத்து வெள்ளை நிறச் சுவர்களை வெறுமனே விட்டு வைப்பதே நாகரிகம் என்று ஆகிவிட்டது.

இருக்கையும் முன் மேசையும் அதில் ஒரு மெழுகு திரிக் குவளையும் முகட்டின் உள்ளே பொருத்தப்பட்ட விளக்கும் போதுமானதாக இருக்கிறது.

இருக்கையின் பின்புறமோ, தூரமாகவோ ஒரு கலைத்துவமிக்க படம் வெகு கவனத்துடன் மாட்டப்பட்டிருக்கிறது. அது கலைத்துவம் மிக்கது என்பதைவிட சந்தைகளில் விளம்பரப்படுத்தபடுவது என்றே சொல்ல வேண்டும். அனேகமாக சட்டமிடப்பட்டிருக்கும் படத்திற்கும் அந்த வீட்டு மனிதருக்கும் பெருத்த இடைவெளி இருப்பதாகவே நான் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்துதிருக்கிறேன்.

விலையுயர்ந்த பொருட்கள் ஒன்றோ இரண்டோ மிக நேர்த்தியாக வைக்கப்படுவதும், விளக்குகளும் அது போலவே இருப்பதும், உயர் நட்சத்திர விடுதிகளின் அறைகளைப் போலவே வீடுகளும் இருக்க வேண்டுமென்ற விளம்பரங்களின் பரிமாணங்கள்தாம்.

ஒன்று போலவே எல்லா வீடுகளும் வெள்ளையாய், வெறுமையாய், சுத்தமாய், பெறுமதியானதாய்க் காட்சியளிக்கிறது. இந்த வீடுகளில் எல்லாம் முழுமையாக உட்காரமுடியாமல் ஒரு இருக்கையின் ஓரத்தில் அமர்ந்துவிட்டு கிளம்பி விடுவதே என் வழக்கமாகவும் இருந்து வருகிறது. வீடு என்பது நிறைந்திருப்பது என்றே சொல்வேன். பொருட்களால் என்றல்ல. வாழ்தலால், கதைகளால், அனுபவங்களால்.



கவிதா லட்சுமி
(நோர்வே)

சிலருக்குபொருள்என்பது இடைஞ்சலாகவும், சிலருக்கு பெரும் பொருட்குவியலே பெரும் வெளியாகவும் இருக்கக்கூடும். வண்ணங்களும் தூரிகைகளும் ஓவியங்களும் குவிந்துகிடக்கும் இடம்-தானே ஒரு ஓவியனின் பெரு வெளியாக இருக்கக்கூடும். அப்படித்தான் இதுவும்.

இதில் நான் ஒன்றை தெளிவாக உணர்ந்திருக்கிறேன். வீட்டின் வெறுமை வேறு வெளி வேறு.

உயர் நாகரிக வீடுகள் என்னைத் தூரத்தில் நிறுத்தி விடுகின்றன. சமயங்களில் இந்த அந்நியத் தன்மை வீட்டு மனிதர்களோடும் ஒட்டிவிடுகிறது.

கொஞ்சமாக வேணும் கலைந்திருக்க வேண்டும். நமக்குப் பிடித்த பொருட்கள் ஆங்காங்கே போட்டது போட்டபடி கிடக்க வேண்டும். நாம் வாழ்ந்த அத்தனை நாள் வாழ்தலையும் அங்காங்கே அசை போடும் இடமாகவும் இருத்தல் வேண்டும். அது சுகம்.

மிக நேர்த்தியாக இருக்கும் வீடுகள் அசௌகரியத்தையே ஏற்படுத்துகின்றன. நாம் எதையும் கலைத்துவிடுவோமோ, நம்மால் எங்காவது அழுக்குப் படிந்து விடுமோ என்ற எண்ணம் மனசெங்கும் துருத்திக் கொண்டே இருக்கிறது.

இன்று ஏவாவின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். நூலகத்தின் முதன்மை நிர்வாகியாக இருந்து ஓய்வு பெற்றவர். நோர்வேஜிய இலக்கியங்கள், அரங்க நிகழ்வுகள் என்று தொடர்ந்து செயற்பட்டு வருபவர்.

அவருடைய வீடே மிக அழகானதொரு குட்டி உலகம். எப்போது போனாலும் நான் கண்களைச் சுழல விட்டுக்கொண்டே இருப்பேன். அத்தனை பொருட்கள் நிறைந்த வீடு.

தொன்மையான பொருட்களைச் சேகரித்து வீடு முழுவதும் நிறைத்து வைத்திருக்கிறார். அவருடைய ஒவ்வொரு பொருளுக்குப் பின்னாலும்

28 ஆம் பக்கம் பார்க்க...



# Lucky Fly Reisebüro

## 2022 Summer Best Offers




e.mail: info@L-Fly.de | www.L-fly.de

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

Essener Str.26 44793 Bochum-Germany


அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# உலகில் ஆயுத வியாபாரத்தை மிஞ்சுகிறது இன்று மருந்து வியாபாரம்!

உயிரைக்காக்கும் மருத்துவம் எப்படி சிறந்த சேவையாக, மனிதநேயமிக்க தொழிலாக கருதப்படுகின்றதோ அதுபோலவே அது மிகப்பெரும் வருமானம் ஈட்டும் வழியாகவும் இருக்கின்றது. பணம் சம்பாதிப்பது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாகிவிட்ட இன்றைய கோப்ரேட் உலகில் மருத்துவமும் மிகப்பெரும் பணம் கொழிக்கும் வணிகமாக மாறியிருக்கின்றது என்பதுதான் உண்மை. எயிட்ஸ் தடுப்பு மருந்தை கண்டுபிடித்து அதன்மூலம் மருத்துவ வல்லரசாக அமேரிக்கா மாறியதுபோல , கொரோனாவை வைத்து சீனாவும் வல்லரசு திட்டம் தீட்டுகிறதா என்கிற கேள்வி நம் அனைவரிடமும் ஏற்பட்டு வருடங்கள் இரண்டு கடந்துவிட்டன!

ஜவுளித் தொழிலில் பயன்படுத்தப்படும் சில குறிப்பிட்ட சாயங்களுக்கு நோய்களைக்குணப்படுத்தும் தன்மை இருப்பதை ஜெர்மன் விஞ்ஞானி ''paul ehrlich '' கண்டுபிடித்ததைத் தொடர்ந்து சாயப்பட்டறைகளெல்லாம் மருந்து நிறுவனங்களாக புதிய அவதாரம் ஏற்றன. 1920ஆம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட தொழில்நுற்ப புரட்சி' அலோபதி மருத்துவத்தை அசைக்கமுடியாத சக்தியாக மாற்றியது .

''Big pharma'' என்பது உலகத்திலுள்ள மிகப்பெரிய மருத்துவ நிறுவனம். (மருத்துவ நிறுவனங்கள், அரசியல்வாதிகள் , NGO நிறுவனங்கள் கைகோர்த்து செயற்படும் ஒரு ரகசிய குழு என்கிற கருத்தும்கூட உண்டு). இந்த குழுவினருக்கு தலைமை தாங்குவது அமெரிக்காவின் '' Rockfellers foundation'' . 1930களில் தொடங்கி , மருந்து உலகில் ஆதிக்கம் செலுத்திவரும் இந்நிறுவனமே ஐநூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவ நிறுவனங்களை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு உலக பொருளாதாரத்தை தனது கண் அசைவுகளில் ஆட்டிப்படைத்துவருகின்றதென்றால் மிகையில்லை.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

Johnson jonson , Roche , merck போன்றவை அப்படிக்கட்டுப்பாட்டில் இருக்கும் நிறுவனங்களுள் முக்கியமானவை . மருந்து வியாபாரத்தில் rokke-fellersl மீறி எந்தவொரு மருந்து நிறுவனமும் தலையெடுத்துவிடமுடியாது . அப்படி தலையெடுக்க நினைத்தால் தனக்குள்ள



அரசியல் செல்வாக்கினைக்கொண்டு அவர்களை மூர்க்கமாக அழித்துவிடுவார்கள் என்று கூறப்படுகிறது . அந்த அளவிற்கு மருந்து வியாபாரத்தில் தன்னுடைய ஆக்டோபஸ் கரங்களை பரவவிட்டிருக்கிறது ரோக். 'நம்மை எப்போதும் சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் மக்களை சாந்தப்படுத்துவதற்கு ஆயுதங்களைவிட மருந்தே சாதகமானது ' என அறிவித்தவர் இந்த நிறுவனத்தின் ஸ்தாபகரான rockfeller . அமேரிக்கா உலகின் அசைக்கமுடியாத வல்லரசாக மாறியதற்கு இந்த மருந்து மாஃபியாக்களும் ஒரு காரணம் . இந்த பரகாசுர மருந்து வியாபாரிகள் தங்களுக்கு வேண்டப்பட்ட NGOUகள் மூலமாக தங்களுக்கு சாதகமான சூழ்நிலையை ஆப்பிரிக்கா போன்ற ஏழை நாடுகளில் உருவாக்குகின்றார்கள்.

எய்ட்ஸ் முதற்கொண்டு கேன்சர்வரை எப்படி உயிர்கொல்லும் நோய்களை ஆதாரமாக வைத்து மருந்து மாஃபியாக்கள் கொழிக்கிறார்கள் என்பதை அம்பலப்படுத்தியுள்ளது சர்வதேச சதிக்கோட்பாடு' என்ற பெயரில் பல்வேறு பிரபலங்களின் முகத்திரையை கிழித்தெறிந்த அமைப்பு. கணனி உலகின் முடிசூடா மன்னனாகவும், உலகின் மிகப்பெரிய பணக்காரராகவும் இருக்கும் பில்கேட்ஸ் மருந்து மாஃபியாக்களின் தூதுவராக செயற்படுகின்றார் என்று குற்றம்சாட்டுகிறது அவ்வமைப்பு . உலகின் சக்திவாய்ந்த மருந்து நிறுவனங்களான novartis , pfizer , போன்ற நிறுவனங்களில் பில்கேட்ஸ் பல பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்திருக்கின்றார் . சோவியத் யூனியன் உச்சத்தில் இருந்த காலத்தில் தங்களுடைய லாபசதவீதம் குறைந்துபோனதை உணர்ந்த மருந்து மாஃபியாக்கள் பில்கேட்ஸ் அறக்கட்டளையை ஒரு கேடயமாக பயன்படுத்த தொடங்கியதாக கூறப்படுகின்றது. பில்கேட்ஸ் அன்ட் மெலிண்டா கேட் அறக்கட்டளையின் (BILL MELINDA GATES FOUNDATION ) வேலை என்னவென்றால் ஏழை நாடுகளில் அமெரிக்க மருந்து நிறுவனங்களுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் . மக்கள் தொகையை கட்டுப்படுத்துகின்றோம் , போலியோவை ஒழிக்கின்றோம் என்கிற பெயரில் ஏழை நாடுகளுக்குள் நுழையும் பில்கேட்ஸ்

27 ஆம் பக்கம் பார்க்க...





'நிறம் மாறாத பூக்கள்' படத்தில் விஜயன், ராதிகா, சுதாகர்



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

# அன்னபூரணி

"போனகிழமை தான் படம் பாத்தனி, திருப்பியும் என்ன சீலைக்கு". " எண்டு தொடங்க, ஓம் அப்பிடியே சீலையும் எடுத்துக் கொண்டு வருவம் வருசத்திக்கு எண்டு செல்லம்மாக்கா சண்முகத்தாருக்கு உறுதியா சொல்லிப்போட்டா. மனிசி சொல்லிறதை தட்டிக் கேக்ககிற ஆம் பிளை ஒருத்தரும் பிறக்கிறதில்லை எண்டதால, சண்முகத்தாரும் சரண்டர ஆனார். முந்தி சண்முகத்தாரும் லேசில விட மாட்டார். மனிசியைப் பேசத் தொடங்கினா ஒழுங்கை முடக்கு வரை பேசிக்கொண்டே போவார். ஆனால் போன மாசம் பொயிலையோட சேத்து மற்றச் சாமாங்கள் ஏத்த வந்த ஜெயசிங் கவோட கள்ளு அடிக்கேக்க, சண்முகத்தார் மனிசீட்டை ஏதோ கேக்கப்போய் ரெண்டு பானை உடைய, இவர் சங்கடப்பட அவன் "ஹம கானிம எக்காய் நம வித்தறாய் வெனஸ்" (எல்லா மனிசியும் ஒண்டு தான் அவனவன்டை மனிசிமாருக்கு ஒவ்வொரு பேர்) எண்ட ஒரு உலக உண்மையச் சொன்னான். அதுக்குப் பிறகு இவர் யோகர் சுவாமி சிஸ்யன் மாதிரி சும்மா இருப்பதே சுகம் எண்ட முடிவுக்கு வந்தார்.

## "திரைக்கு வருகிறது நிறம் மாறாத பூக்கள்"

சண்டை தொடங்கி செல்லம்மாக்கா சன்னதம் ஆடலு சண்முகத்தார் ஒண்டும் பறையாம ஓம் எண்டார். போனமுறை போகேக்கை "திரைக்கு வருகிறது நிறம் மாறாத பூக்கள்" எண்ட போர்டை பார்த்ததுமே மனிசி முடிவெடித் திட்டுது எண்டு நெச்சபடி சண்முகத்தாரும் படம் பாக்க ரெடி ஆனார். இனி என்ன நாலு குடும்பத்தைச் சேத்துப் போனாத்தான் சுகம் எண்டு போட்டு அக்கம் பக்கம் ஆள் சேத்தார் சண்முகத்தார்.

புதுப்படம் எண்ட படியால் 5 show போடுவாங்கள் வேளைக்கு வெளிக்கிட்டால் தான் வசதியா இருக்கும், போனமுறை மூண்டாவது றோவில இருந்து நான் பட்ட பாடு ஒரே விசிலடியும், சிகரட் மணமும், மூட்டைப்பூச்சி வேற, நிமிந்து இருந்து பாத்து கழுத்து நோ எண்டு செல்லம் மாக்கா புலம்ப சண்முகத்தார் சாரத்தை மாத்தி வேட்டியைக் கட்டினார். போட்டு வந்து விடிய செக்குக்கு எள்ளுக் குடுக்க வேணும் எண்ட யோசினையோட தியட்டருக்கு பக்கத்து பாரின்டை சந்தோசத்தில சண்முகத்தாரும் படம் பாக்கப் பத்துப் பேரும் வெளிக்கிட்டிச் சினம். நேத்துப் போட்டு வந்தவங்களிட்டை நிலமையை கேட்டுப் போட்டுத்தான் வந்தனான் எண்டு கனகலிங்கம் சொல்ல எல்லாரும் வெளிக்கிட்டினம் சன்னதியானைக் கும்பிட்ட படி.

சண்முகத்தார் இந்த முறை செலவைப் பாக்காம ODC ரிக்கற் எடுத்தார். அபிசேக ஆராதனையோட படம் தொடங்கி முடியும் வரை செல்லம்மாக்கா கதைக்கேல்லை, ஆனபடியால் இது நல்ல படமாத் தான் இருக்கும் என சண்முகத்தார் முடிவுக்கு வந்தார். படத்தின்டை பாதிப்போட கதைக்காம அமைதியா வந்த மனிசியைப் பாத்திட்டு யோசிச்சார்,உந்த ரீலை வாங்கிக் கொண்டு போய் ஒவ்வொரு நாளும் போட்டுக் காட்டினா எப்பிடி இருக்கும் வீடு எண்டு. அழுதும் அழாமலும் வந்த செல்லம்மாக்கா கடையை மறத்திட்டா எண்ட சண்முகத்தார் முடிவெடுக்க, திடீரெண்டு தொடங்கினா " எப்பிடியும நல்லதா ஒரு பத்துச் சீலை எடுப்பம்" எண்டு.

என்னெண்டு தான் உந்தப் பெண்டுகள் டக்டக்கெண்டு மாறுறாளவையோ எண்டு யோசிச்சுக் கொண்டு சண்முகத்தார் கடைப்பக்கமாகப் போக, கடைக்காரன் கண்டோன்னயே கதிரையைப்போட்டு வெளீல இருத்தி வைச்சான் போன ஆம்பிளைகளை. நித்திரை வரத் தொடங்க நேரத்தைப் பாத்திட்டு சண்முகத்தார் அந்தரப்பட,தனக்கும் சண்முகத்தாருக்கும் சம்மந்தம் இல்லை எண்ட மாதிரி செல்லம்மாக்கா சீலைய மட்டும் பாத்துக்கொண்டு இருந்தா. சீலை எண்டு தொடங்கி,வேட்டி சாரம் எல்லாம் வாங்கீட்டு லக்கேஜைப் பற்றிக் கவலைப் படாமல் செல்லமாக்கா வயித்தைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கினா.வெளீல வந்து இட்டலியும் வடையும் சாப்பிட்டிட்டு கோப்பியும் குடிச்சிட்டு வெளிக்கிட்டிச்சினம் எல்லாரும்.

ஓவர் speed ஆப் போனாத்தான் பிடிபடாமல் போகலாம் எண்டு ஆரோ சொல்ல வேகம் கொஞ்சம் கூடிச்சிது.... அணியத்தில நிண்ட படி யாரும் வாறானோ எண்டு சண்முகத்தார் உத்துப்பாத்த படி வந்தார். சண்முகத்தார் தண்டயல்



அமெரிக்கா சென்ற அன்னபூரணி

27 ஆம் பக்கம் பார்க்க...



Dr.IN



# இனிப்பில் இருந்து இனி எப்போ விடுதலை!


சொக்லேட்,ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளில் ஆர்வம் அதிகமாக எமக்கு இருக்கின்றது. கிட்டத்தட்ட இவற்றுக்கு பலர் அடிமையாகி விட்டோம் என்று கூடச் சொல்லலாம்.

இனிப்புக்கு அடிமையாவது என்பது வெறும் பேச்சுச் சொல்ல அல்ல. அது ஒரு நோய் போல பலரையும் பீடித்துள்ளது. ஏனெனில் நாம் இனிப்பை உட்கொள்ளும் போது எமது குருதியில் அபின் சார்ந்ததும் டோபமின் போன்றதுமான இரசாயனங்கள் கலக்கின்றன என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

குருதியில் அதிகளவு டோபமின் சேரும்போது எம்மையறியது ஒரு இன்ப உணர்வு ஏற்படுகிறது. அந்த உணர்வை தொடர வேண்டுமாயின் உடலானது இனிப்பை மேலும் உட்கொள்ளத் தூண்டுகிறது. நாட்செல்லச் செல்ல அதே அளவு இன்பத்தைப் பெற கூடியளவிலான இனிப்பை உட்கொள்ள நேர்கிறது. மது மற்றும் போதைப் பொருள்களும் அவ்வாறுதான் அடிமையாக்குகின்றன.

இனிப்பானது கொகேயினை விட அதிகமாக ஒருவரை அடிமைப்படுத்த வல்லது என Cassie Bjork என்ற ஆய்வாளர் கூறுகிறார். அத்துடன் அதிக இனிப்பை உட்கொள்வதால் எடை ஏறுகிறது. இதன் தொடர்ச்சியாக பிரஸர், கொலஸ்டரோல், நீரிழிவு, இருதய நோய்கள் போன்றவை வரும். எனவே நீங்கள் விரும்பியவாறு அதிக இனிப்பிலிருந்து விடுபட வேண்டியது அவசியம்தான்.

இனிப்பு என்பது சீனி சர்க்கரை ஆகியவற்றிலும் அவை சேர்க்கப்பட்ட உணவுகளிலும் மட்டும்தான் இருக்கிறது என்றில்லை. பழங்களிலும் இருக்கிறது. பழங்களில் உள்ள இனிப்பு தனியாக வருவதில்லை. பழங்களிலுள்ள இனிப்பானது நார்ப்பொருள் மற்றும் ஏனைய போசணைப் பொருட்களுடன் கலந்து வருகிறது. இதனால் அவற்றில் சீனியின் அடர்த்தி குறைவு. எனவே அவற்றை உண்ணும் போது குருதியில் சீனியின் அளவு திடீரென ஏறுவதில்லை என்பதையும் குறிப்பிடலாம். எனவே அவற்றில் அடிமையாகும் நிலை ஏற்படுவதில்லை.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

## இதிலிருந்து விடுபடுவது எப்படி?

முதல் வேலையாக உங்களது வீட்டிலிருந்து சீனியையும் சீனி சார்ந்த பொருட்களை வீசிவிடுங்கள். அலுமாரிகளிலிருந்து அகற்றுவதுடன் உங்கள் முயற்சி நின்றுவிடக் கூடாது. அவற்றை உண்பதில்லை என திடசங்கற்பம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஓவ்வொரு நேர உணவையும் சரியான நேரத்தில் போதியளவாகவும் போசாக்கு நிறைந்ததாகவும் உட்கொள்ள வேண்டும். காலை உணவிலிருந்து இதை ஆரம்பிப்பது முக்கியம். இப்பொழுது பலர் வேலை அவசரத்தில் காலை உணவை தவிர்த்துவிட்டு பின்னர் பசி எடுக்கும் போது திடீர் உணவுகளை கடையில் வாங்கித் திணிக்கும் போதே இந்த பிரச்சனை ஆரம்பிக்கிறது.

எனவே மாப் பொருள் புரதம் கொழுப்பு போன்ற போசணைகள் சரியான அளவில் உள்ள உணவுகளைத் தேர்ந்தெடுங்கள். ஏதாவது காய்கறி பழவகைகள் சேர்ந்திருப்பது அவசியம். போதிய நீர் அருந்துங்கள். தினமும் 6 கிளாஸ் நீர் அருந்துவது நல்லது. அவை இனிப்பூட்டப்பட்ட பானங்களாக இருக்கக் கூடாது.

பசி இருப்பது கூடாது. பசி இருந்தால் இனிப்பு சேர்ந்த உணவுகளுக்கான அவா அதிகரிக்கும். எனவே பிரதான உணவுகளுக்கு இடைப்பட்ட வேளைகளில் சிறு உணவுகள் உட்கொள்ளலாம். ஆனால் கேக் பிஸ்கற், ரோல்ஸ், பற்றிஸ், உருளைக்கிழங்கு சிப்ஸ் போன்றவற்றை தொடவும் கூடாது. பழங்களாகவோ காய்கறிகள் அதிகம் சேர்ந்தவையாகவும் இருப்பது நல்லது.

மாறாக வறுத்த கடலை, கச்சான் எண்ணெய் சேர்க்காத கரட் வறுவல் போன்ற ஏதாவது ஒரு இனிப்பற்ற போசாக்கு சிற்றுணவை தயாராக வைத்திருங்கள். வீட்டில் இருக்கும் போது மட்டுமல்ல வேலைக்கு போகும் போதோ, வெளியே செல்லும் போதோ பசி எடுக்கும்போது இவற்றை உண்ணுங்கள். கடை நொறுக்குத் தீனிகளை சாப்பிடவே வேண்டாம். தினசரி ஏதாவது உடல் உழைப்பில் ஈடுபடுங்கள் அல்லது உடற் பயிற்சி செய்யுங்கள். இது உங்கள் குருதியில் சீனியின் அளவை அதிகரிக்க விடாமல் தடுப்பதால் இனிப்பு மீதான நாட்டத்தையும் குறைக்கும். அத்துடன் மனம் மகிழ்ச்சியாக இருப்பதாலும் வெற்றுப் பொழுதுகள் இல்லாததாலும் இனிப்பை நாட வேண்டிய அவசியம் ஏற்படாது.

மனம் மகிழ்சியாக இருப்பது அவசியம். மறை சிந்தனைகளில் மூழ்காதீர்கள். தேவையற்ற உணர்வுச் சிக்கலகளில் மூழ்க வேண்டாம். மகிழ்சிசான பொழுதுபோக்குளில் ஈடுபடுங்கள். மன–அழுத்தம் இருந்தால் அதை மறக்க பலர் மதுவை நாடுகிறார்கள். உங்களைப் போன்ற இனிப்பிற்கு அடிமையானவர்கள் இனிப்பையே நாடுவார்கள். எனவே மனஅழுத்தத்தை தூண்டும் விடயங்களில் ஈடுபடாதீர்கள். உடற் பயிற்சி, நடைப் பயிற்சி, தியானம்,



யோகாசனம், மந்திர உச்சாடனம் போன்ற ஏதாவது செயற்பாட்டில் ஈடுபடுவதும் நன்மை தரும். அதே போல போதிய உறக்கமும் அவசியம்.

இக் கட்டுரையைப் படித்து முடித்து விட்டு சும்மா இருக்காதீர்கள். உடனடியாக எழுந்து உங்கள் வீட்டிலுள்ள சொக்லேட், ஐஸ்கிறீம் முதற்கொண்டு எல்லா இனிப்புகளையும் குப்பைக் கூடையில் வீசுவதிலிருந்து உங்கள் முயற்சியை ஆரம்பியுங்கள். இனிப்பிலிருந்து விடுதலை நிச்சயம்.







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

# யேர்மனியில் தமிழ்த் திரைத்துறை வளர்ச்சிக்கு கட்டியம் கூறும்

# 'திரையும் உரையும்'







யேர்மனியின் டோட்முண்ட் நகரில் கடந்த 26.02.2022 அன்று 'திரையும் உரையும்' நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. யேர்மனியில் தமிழ்த் திரைத்துறை வளர்ச்சி அடைய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு 2020இல் 'திரையும் உரையும்' நிகழ்ச்சி முதன்முறையாக நடைபெற்றது. 2021இல் கொரோனா காரணமாக நிகழ்ச்சி நடைபெறவில்லை.

இம்முறை நிகழ்விற்கு நோர்வேயில் இருந்து கவிதா லட்சுமி, பிரான்ஸில் இருந்து அஜந்தன், யேர்மனியில் இருந்து நெடுந்தீவு முகிலன், தியன் பா தமிழ்நாட்டைச் சேர்ந்த சிந்தியா ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாக கலந்து கொண்டிருந்தார்கள். நிகழ்வில் இயக்குனர்கள், நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று பலர் கலந்து கொண்டிருந்தார்கள். பார்வையாளர்கள் மிகச் சிறந்த சினிமா ரசிகர்களாக இருந்தார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸில் அமலின் இயக்கத்தில் உருவான 'வேடம்' குறும்படம், யேர்மனியில் கீர்த்தனா இயக்கிய 'பல்லவி', ஈழத்தில் நெடுந்தீவு முகிலன் இயக்கய 'பாறகாரன்' குறும்படங்களோடு யேர்மனியில் புதிய குறும்படங்களாக வெளிவந்துள்ள மதுசனின் 'நீ என் தோழி' மற்றும் எனது 'வானம்' குறும்படமும் நிகழ்வில் திரையிடப்பட்டன. யேர்மனியை சேர்ந்த துருக்கிய நண்பர்களின் உருவாக்கத்தில் வெளியான 'கனிமா' என்கின்ற யேர்மன் மொழிக் குறும்படமும் திரையிடப்பட்டது.

பார்வையாளர்கள் வெளிப்படையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். வாதப்பிரதிவாதங்களும் நடைபெற்றன. உரையாடல் சினிமாவுக்குள்ளேய நின்றது ஆரோக்கியமாக இருந்தது. நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். நிகழ்வு 12 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணி வரை நடைபெற்ற போதும் பார்வையாளர்கள் நிகழ்வு முடியும் வரை இருந்தார்கள். நிகழ்ச்சியை ஒழுங்கமைத்த பன்முகக் கலைஞர் திரு வி.சபேசனின் முயற்சி போற்றுதலுக்குரியது.







## குட்டி Story

# உள்ளவும் நினை



தப்பு நடந்துவிட்டது கண்மூடித் திறப்பதற்குள்எல்லாமே முடிந்து விட்டது. பெரிய சபை பெரியமனிதர்கள் அதனால் தப்பும் பெரியதாகிவிட்டது. தப்புச் செய்த அக்கா அடுப்படியில் அழுதபடி. 'என்னடி நீ' அம்மாவும் வார்த்தைகளால் நறுக்கினாள்.

பெரியவர் வந்தார் 'எண்டாலும் இவ்வளவு கவனக்குறைவுகூடாது அதுவும் பெண்பிள்ளைகளுக்கு' என்று உறுமிச் சென்றார். 'கவனக் குறைவு இருபாலாருக்கும் பொது தானே' என்று கேட்க நினைத்த வாய்கள் வார்த்தைகளை வாய்க்குள்ளேயே விழுங்கின. என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற பதைபதைப்பில் அடுப்படி சபையைப் பார்த்தபடியே

'நிறுத்துங்கள் யாரும் ரீயைக் குடிக்காதீர்கள்' பெரியவர்சபையில் கர்ச்சித்தார். 'இதுக்குத்தான் கல்லுப்பு பாவியுங்கோஎன்று தலையால அடிச்சுக்கொண்டன் கேட்டால்தானே' அடுப்படியில் வயதுபோன பாட்டியொருவர் புறுபுறுத்தார்!



தமிழினி பாலசுந்தரி (நியூஸ்லாந்து)





## எனது நாடக அனுபவங்கள் 17

ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# ஒரு பாலை வீடு நாடகம்- 1980





கடந்த இதழில் 1979 இல் யாழ்ப்பாணத்தில் எழுபது வயதில் இருந்து இருபது வயது வரையிலான சுண்டுக்குளி பழைய மாணவிகள் 20 பேர் நடித்த 'ஒரு பாலை வீடு' நாடகம் பற்றியும் இதனைத் தயாரித்து நெறியாள்கை செய்த க. பாலேந்திரா இந்த நாடகத்தைக் கொழும்பு பேராதனை போன்ற இடங்களில் மேடையேற்ற விரும்பியது பற்றியும் இந்த நாடக ஒத்திகைகளுக்கு பாலேந்திராவிற்கு உதவியாக நான் போய் வந்தது பற்றியும் எழுதியிருந்தேன்.

'ஒரு பாலை வீடு' நாடகத்தின் கதைக்கு வருவோம். 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஸ்பெயினின் கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகம் இது. குடும்ப மானம் குலத்தின் கௌரவம் என்பவற்றைப் பெரிதாக மதித்து கொடூரமான முறையில் வீட்டில் அதிகாரத்தைச் செலுத்தும் ஒரு தாய். அவருக்கு 40 வயதில் இருந்து 20 வயது வரையான திருமணமாகாத ஐந்து மகள்மார். கணவர் இறந்துவிட்டார். கணவரின் இறுதிச் சடங்குகள் முடிந்த கையோடு வெளியாரின் வருகை நிறுத்தப்பட்டு வீட்டின் கதவுகள் அடைக்கப்படுகின்றன. மூடுண்ட வீட்டினுள் அடைபட்டு ஆசாபாசங்கள் மறுக்கப்பட்டு வெறுப்பும் விரக்தியுமாக வாழுகிறார்கள் இந்தப் பெண்கள். ஆண் வாசனையே அறியாதவர்கள். அந்த வீட்டில் வேலை பார்க்கும் பணிப்பெண்களும் கூட வீட்டுத் தலைவியின் அதிகார முறையினால் வெறுப்புற்று இருக்கிறார்கள். தனது அதிகாரத்தை வயது முதிர்ந்த தன் தாயாரிடம் கூடக் காட்டுகிறார் அந்த வீட்டுத் தலைவி.

தகிக்கும் வறண்ட பாலைவனமாகக் காணப்படுகிறது அந்த வீடு. தனது மகள்மாருக்குத் தகுதியான மாப்பிள்ளைகள் அந்தச் சுற்றுவட்டாரத்திலேயே இல்லை என்று கர்வமும் பெருமையுமாக, வந்த சம்பந்தங்களை ஒதுக்கித் தள்ளியபடி தாய். தமது உணர்ச்சிகளுக்குத் தடைபோட முடியாமல் தவிக்கும் மகள்மார். இவர்கள் வாழ்க்கையில் உள்ளிடும் ஒரு இளைஞன் இந்தப் பெண்களின் உணர்ச்சிகளோடு விளையாடுகிறான். அந்த இளைஞனுக்காக சகோதரிகள் தங்களுக்கிடையிலேயே மோதுப்படுகிறார்கள். இறுதியில் அங்கு ஒரு தற்கொலைகூட நடக்கிறது. மகள் இறந்தபோதும் கூட தன் கடும்போக்கை விடாமல் அதே அதிகாரத்தோடு நடந்துகொள்கிறார் தாய். மிகவும் உக்கிரமான நாடகம் இது.

அந்த நேரங்களில் பாலேந்திராவும் எமது நாடக அமைப்பான அவைக்காற்று கலைக் கழகமும் மொழிபெயர்ப்பு நாடகங்களையே போடுகிறார்கள் என்று சிலரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. 'ஒரு பாலை வீடு' நாடகத்தின் முதலாவது மேடையேற்றத்தினைப் பார்த்த பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசா அவர்கள் தமிழகத்தில் இருந்து வெளியாகிய 'கணையாழி' ஆனி 1979 இதழில் மிகக் காத்திரமான விமர்சனம் ஒன்றினை எழுதியிருந்தார். அதில் ;

மொழிபெயர்ப்பு நாடகமாய் இருந்தபோதிலும் ஒன்றிப்பை ஏற்படுத்தி எமது உணர்வுலகை இது அகலிக்கிறது. ஸ்பானியப் பாலைவீட்டின் பல அம்சங்கள் எமது யாழ்ப்பாணச் சமூக வாழ்வின் வறட்சிநிலைகளை இயல்பாகவே எமக்கு நினைப்பூட்டுகின்றன. சாதியாசாரம் உயர்குடிப்பெருமை சீதனப் பிரச்சினை போன்றவற்றால் திருமணம் நிறைவேறாமல் உணர்ச்சிகள் மரத்து காய்ஞ்சு விறகுதடிகளாகும்' 'முதுகுமரிகளை' – அமுக்கப்பட்ட உணர்ச்சிகளின் பீறிடலால் ஒழுக்கவரம்புகளைக் களவில் உடைத்துக்கொண்டே வெளியில் 'தூய்மை'யைப் பூசிமெழுகிச் செல்லும் பெண்களைக்கொண்ட 'பல பாலைவீடுகளை' எம்மைச் சுற்றிய சமூகத்திலும் காண முடிவதால் நாடகம் அந்நியமானதாகவே இருக்கவில்லை. என்று எழுதியிருந்தார்.

பாலேந்திரா 'ஒரு பாலை வீடு' நாடகத்தை வேறு இடங்களில் மேடையேற்ற விரும்புவதாகத் தெரிவித்தபோது இதில் நடித்த பெண்கள் சிலர் நடிக்க வர மறுத்துவிட்டார்கள். தாங்கள் தங்களுடைய பாடசாலைக்காக தங்களுடைய பாடசாலை மண்டபத்தில் மட்டுமே நடிக்க எண்ணம் கொண்டு நடித்ததாகவும் வேறு இடங்களில் நடிக்க விரும்பவில்லை என்றும் சொல்லிவிட்டார்கள். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கூட நடிக்க முடியாது என்றார்கள். தமிழ்ப் பெண்கள் பொதுமேடைகளில் நடிப்பதை எமது சமூகம் இளக்காரமாகப் பார்த்த அந்தக் காலகட்டத்தில் இவர்கள் சமூகத்திற்கு அஞ்சினார்களோ அல்லது கௌரவக்குறைச்சல் என்று நினைத்தார்களோ தெரியாது. பாலேந்திராவிற்கு எடுக்கும் முயற்சியில் பின்வாங்கும் பழக்கமில்லை. உடனே என்னை ஒரு பாத்திரத்தில் நடிக்கக் கேட்டார். அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த சில மாணவிகளையும் வேறு சில பெண்களையும் சில பாத்திரங்களில் நடிக்க வைத்தார். இதில் கலா தேவராஜா மேர்சி ஞானப்பிரகாசம் காயத்ரி போன்றோரின் பெயர்கள் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

நாங்கள் புதிய நடிகைகள் என்றபடியால் பாலேந்திரா ஒத்திகைகளை மீண்டும் ஆரம்பித்தார். ஒரு புதிய தயாரிப்பாகவே இது இருந்தது. நான் ஏற்கனவே முதல் தயாரிப்பின்போது பாலேந்திராவிற்கு உதவியாக ஒத்திகைகளுக்குச் சென்றபடியால் எனக்கு முழு நாடகமும் நன்கு தெரிந்திருந்தது. நான் ஐந்து மகள்மாரில் ஒருவராக நடித்தேன். நான் நடித்த மகள் பாத்திரம் பார்ப்பதற்கு அமைதியான ஒருவராய்த் தெரிந்தாலும் உள்ளுக்குள் குமைந்து கொண்டிருக்கின்ற ஒரு பெண் பாத்திரம். தாயின் கட்டுக்குள் இறுக்கப்பட்டு அமுங்கிப்போன நிலையில் தனது தங்கை காதலிக்கும் இளைஞனையே தானும் விரும்பி அதனால் தங்கையுடனேயே காரசாரமாக மோதும் ஒரு பெண்.





RAJU PARCEL SERVICE
ராஜு பொதிகள் சேவை
40 kg (max)
60€
37 cm
35 cm
65 cm
BAUMARKT
BAUMARKT
40 kg (max)
70€
BOX FREE
RPS
RAJU PARCEL SERVICE
40 cm
40 cm
60 cm
40 kg (max)
80€
XXL
BAUMARKT
CARGO
XXL
BAUMARKT
CARGO
42,6 cm
41,3 cm
75,3 cm
RPS
RAJU PARCEL SERVICE
RPS
RAJU PARCEL SERVICE
RPS
RAJU PARCEL SERVIC
RAJU PARCEL SERVICE
RPSS
ராஜு பொதிகள் சேவை
* முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், காலி ஆகிய பிரதேசங்களில் பொதிகளைப் பெறுபவரிடம் இருந்து போக்குவரத்துக் கட்டணம் அறவிடப்படும்!
தொடர்புகளுக்கு:
RAJU PARCEL SERVICE
DE : 0049 (0) 163 5065 663
E-MAIL : RAJUPARCEL@WEB.DE




கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# வசந்தமாறன்

## மாறன் அம்புகள் என் மீது வாரி வாரி வீசவே கண்பாராயோ? வந்துசேராயோ?

காதல் என்னும் பெரும் வியப்பிற்கு மிக மிக நெருங்கியவராய் மன்மதனை உருவகிப்பது காதல் மரபு.

மாறன், மதனன், அனங்கன், அந்தகன், கந்தர்வன், மன்ராயன், ராகவிருந்தன், மதனசேகரன், சுந்தரன், ரதிமணவாளன், வில்லாளன், புஷ்பவனம், வசந்த புஷ்பத்தானுவன், மதனன், பிரத்யும்னன், பஞ்சசரன், ரதிபதி, மகரத்வஜன் எனப் பல பெயர்கள் சூட்டப்பட்டு, தேனீக்களால் உருவாக்கப்பட்ட நாண் கொண்ட கரும்பு வில்லும், மலர்க்கணைகளும் ஏந்திய காமத்தின் அதிபதியாக காமதேவன் சித்தரிக்கப்படுகிறார்.

அஞ்சுகத்தின் மீதமர்ந்து கெஞ்சும் காதலரைக் காத்திட வலம் வரும் காமனின் துணை ரதிதேவி. ரூப சௌந்தரியத்தின் சிகரம் என மன்மதனும் ரதியும் காட்சி தர, காதல் உலகின் ரசானுபவ கதைகளை உருவாக்கும் நாயகன் ஆகிறான்.



வசந்த காலப் பருவத்திற்கு உரித்தான காமன், மகரக் கொடியுடன் இருப்பதை கி.மு. முதலாம் நூற்றாண்டு கவிஞர் காளிதாசன் பாடுகிறார். அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்கள் பலதும் குறிப்பிடும் காமனைப் பற்றிய குறிப்புக்கள் உலகின் மிகப் பழமையான நூலான ரிக் வேதத்திலும் இருக்கிறது. இதிலிருந்து காதலின் பழமை கூட புலப்படுகிறது. காமாமே பிரபஞ்சத்தின் வித்து.

நெடியோன் மகன் என இயம்பும் கலித்தொகைப் பாடலில் இருந்து திருமாலின் மகன் காமன் என்று அறியப்பட்டாலும், பிரம்மாவின் மானசீக மகன் எனவும் புராணங்கள் கூறுகிறது. கண்ணனுக்கும், ருக்மிணிக்கும் பிறந்த பிரித்தியும்னன் காமனின் அவதாரம் என்றும் கூறப்படுகிறது.

விரைமலர் அம்பினோன் என்றும், அரி படு ஐவரை என்றும் பரிபாடலில் குறிப்பிடும் மாறனின் ஐந்து மலர்கணைகளும் தாமரை, அசோகம், மாம்பூ, முல்லை, நீலோத்பலம் என விரிகிறது.

நாராயணனுக்கே தன் உடல் உயிர் யாவற்றையும் சங்கல்பித்து காத்திருக்கும் ஆண்டாள், காமனின் தம்பி சாமானையும் வேண்டி நோன்பிருக்கிறாள்.

காதலர் மனத்தைக் கடைபவனாக இருக்கும் காமனைப் பணியாத காதல் இலக்கியங்கள் இல்லை.

“ பருவரலும் பைதலும்
காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகுவான் “
– திருக்குறள்

பாரதியின் சந்திரிகையின் கதையிலும், ஞானரதத்திலும், குயில் பாட்டிலும் சொட்டும் காதல் ரசம் பருகப் பருக சுவைதரவல்லது.



பாரதியின் ஞானரதத்தில் மன்மதன் பூஜை, மன்மதன் தகன கதை, வசந்த காலம், காமன் திருவிழா, எனப் பலதும் குறிப்பிடப்பட்டுள்ளது. காமன் பண்டிகையும் தமிழர் மரபேயாகும்.

மன்மதனின் மலர்க்கணைகள் வீசப்பட்டால், இயற்கையோடு இணங்கி நிற்பதும், மன்மதனை தியானிப்பதும் ஒன்றென ஆகும் காலமாகிவிடும். பாடுகின்ற குயில்களும், கூடுகின்ற முகில்களும், சந்தம் சிந்தும் அலைகளும், கடலும் வானும் தழுவிய காட்சியும், மனம் மயக்கும் மாருதமும், மலர் தீண்டும் வண்டும், சந்திர கிரண ஜோதியும், இத்தகை எழில் கொஞ்சும் காட்சிகளில் நுழையும் இசையும், உள்ளுயிரிலே புகுந்து இனிய சலனங்கள் தருவதும், மனோகர சுகந்தம் வீசும் நினைவுகளை மீட்டி மீட்டி பார்ப்பதுவும் மதனன் மனிதனுக்கு தரும் வரன்கள்.

ஆ!! இத்தனை இன்ப மிகுதியை மனிதன் உள்வாங்கும் போது தேவனாகிறான். துன்ப நினைவுகள் தூர விலகிச் சென்று காதல் சுடரினில் காணாமல் போய் விடுகின்றன. மதன மேடையில் சினமும் அச்சமும் முகவரி தொலைக்கின்றன. உயிர்கள் ஒன்றை ஒன்றை உறிஞ்சிக்கொள்ளும் வேகத்தில் ஆணவம் மொத்தமாக மாய்க்கப்படுகின்றது. அந்தப் பெருங்களியில் கண்ணயர்ந்து விழித்திடும் போதெல்லாம் மீண்டும் பிறந்தது போல புத்துணர்வு பெருக்கெடுக்கும். மாய அறிவினை மாறன் கணைகள் மாய்கின்றன. ஆலிங்கன பொழுதுகள் பொற்காலம் ஆகின்றன, போர் அழிகின்றது. மனத்திடை அன்பின் தீ ஒளிர்கின்றதால் தீய எண்ணங்கள் ஒழிகின்றது. காதலின் முயக்கத்தில் சொற்கள் பயனற்றதாகிறது. மோனத்தின் வெளியில் மௌனத்தின் மேன்மை புலப்படுகிறது. அத்வைதம் நிலவுகிறது. உண்மை தெரிகிறது. இதுவே பிறவிப் பயணம்.


இவ்வாறு கோடி கோடி இன்பத்தில் திளைத்து முக்தி பெரும் யுக்தியை காட்டுகிறார் பாரதி. மானிட பிறவியின் மகத்துவத்தை அன்பின் பாதையில் காட்டித்தருகிறார். காதல் அப்பாதையின் செங்கம்பளமாகிறது. அவ்வழியெல்லாம் மாறனின் கணைகள் வாரி வாரி வீசி சுகந்தம் நிரப்புகிறது. மதனன் இவ்வழியின் ஒளி விளக்காகிறான். இயக்கமாகிறான். ஆக, மன்மதன் முதன்மைப் படுகிறான்.

ஒன்று உறுதி ! காதலாகிக் கிடப்பதே கடத்தலின் ஏக வழி !!





# அற்புதமான நடிகர் முத்துராமன்



**நடிகர் சிவகுமார்**



**1981** அக்டோபர் 16 –ந் திகதி காலை 6.30 மணி ஊட்டி - கால்ப் காட்டேஜ் ஆயிரம் முத்தங்கள் படத்திற்கு ஒப்பனை செய்து கொண்டிருந்தேன். உதவியாளர் ஓடிவந்து 'சார்,முத்துராமன் சார் தெருவில் மயக்கமா கிடக்கறார் சார் என்றான். ஓடிச்சென்று காரில் ஏற்றி ஊட்டி டாக்டரிடம் காட்ட, உயிர்போய் அரைமணி ஆகிவிட்டது என்றார்.

மீண்டும் காட்டேஜ்... காரிலிருந்து உடம்பை நிமிர்த்தி இறக்கும்போது அவர் மூச்சுக்காற்று குபுக்கென என்மேல் பட, அய்யோ உயிரோட இருக்கறவரை செத்துப்போயிட்டார்னு டாக்டர் சொல்லிட்டாரே' அண்ணா, அண்ணா எழுந்திருங்கண்ணா' என்று நானும் நடிகை ராதா, அவர் அம்மா, மூவரும் யூகலிப்டஸ் ஆயிலை அவர் உடம்பு முழுக்க பூசி தேய்த்தவாறு கதறினோம். அவர் பேசவில்லை. போய்விட்டார்.



ரத்த அழுத்த நோய் பல ஆண்டுகளாக அவருக்கு... படத்தில் ராதாவுக்கு அப்பாவாக நடிக்க வந்தவர்– நான் நேற்று காலை ஓடியதைப் பார்த்து ஆர்வத்தில் ஓடியிருக்கிறார். ஊட்டியில், 7000 அடி உயரத்தில் அதிகாலையில், பனிமூட்டம் அதிகம் இருக்கும் போது, ஆக்சிஜன் மிகவும் குறைவாக இருக்கும். அதனால் ஓடியவர் மூச்சுத்திணறி விழுந்து விட்டார்...

நெஞ்சில் ஓர் ஆலயம் - படம் கண்ணியமான இந்தக் கலைஞனை திரும்பிப் பார்க்கவைத்தது... காதலிக்க நேரமில்லை– தூக்கி நிறுத்தியது.. வங்காள நடிகரைப் போல் கம்பீரத் தோற்றம், காந்தக்கண்கள், கணீரென்ற குரல்,கனிவான உள்ளம், எவரையும் குறை சொல்லாத, எல்லோரையும் நேசித்த– சகோதரக் கலைஞன்– இதோ நம்மை விட்டு அவசரமாகப் புறப்பட்டுப் போய்விட்டார். தாங்க முடியாத சோகத்துடன் இந்தச்செய்தியை சென்னையிலுள்ள அவர் வீட்டுக்குத் தெரிவித்தோம். தாயே உனக்காக - காவல் தெய்வம் –ராஜ ராஜ சோழன்– காரைக்கால் அம்மையார்– திருமாங்கல்யம் – தீர்க்க சுமங்கலி என அவரும் நானும் 15 படங்களுக்கு மேல் சேர்ந்து நடித்தோம். ஒரு மூத்த சகோதரனாக என் மீது அன்பைப் பொழிவார்.

மாலை 4 மணிக்கு – ஊட்டியிலிருந்து புறப்பட்டு மறுநாள் விடியற்காலை 5.00 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தோம். சிவாஜி அண்ணனும் திரளாக, திரை உலகத்தினரும் காத்திருந்தனர். சென்ற வாரம் சிரித்துக்கொண்டு ஊட்டி போனவர், சடலமாய்த் திரும்பிய கோரக்காட்சியைக் கண்டதும், மயங்கிச் சரிந்து விட்டார் திருமதி. சுலோசனா. முத்துராமன் தமிழ் உச்சரிப்பு காதுக்கு இனிமை. சொல்வளம் மிக்க நடிகர். திருவிளையாடல் திரைப்படத்திலும், ராஜராஜ சோழன் திரைப்படத்திலும் அவரது வசனங்கள் கம்பீரமானவை. சிறந்த கலைஞன். உரிய இடம் தமிழ் சினமாவில் கிடைக்கவில்லை. இப்பவும் அவர் நடித்த படங்களை விரும்பிப் பார்ப்பேன்.







# ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்!

ஒரு போர்க்களத்தில் யாரும் கவனிக்காத பகுதியில்தான் முக்கியமான சம்பவங்கள் நிகழும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் இரண்டு வாரங்களைத் தாண்டிய நிலையில், பலரும் கவனிக்க மறந்த மூன்று விஷயங்கள் முக்கியமானவை.

★ இரண்டாம் உலகப் போரில் பல நாடுகளின் அழிவுக்குக் காரணமாக இருந்தது ஜெர்மனி. அதன்பின் ஆயுதங்களுக்குச் செலவழிக்கவே கூச்சப்படுகிற நாடாக அது இருந்தது. முதல்முறையாக இப்போது ரஷ்யாவைப் பார்த்து பயந்து இராணுவ பட்ஜெட்டுக்கு 8,35,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

★சீனா வரும் ஆண்டுக்கான இராணுவ பட்ஜெட்டைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. 17,73,000 கோடி ரூபாய் என்பது இதுவரை இல்லாத செலவு.

★உலகின் மிகப்பெரிய ஆயுத நிறுவனங்கள் அமெரிக்காவின் ரேத்தியான் மற்றும் லாக்ஹீட் மார்ட்டின். 'உக்ரைன் பிரச்னையால் நமக்கு நல்ல வியாபாரம் கிடைத்துள்ளது' என்று இந்த இரு நிறுவனங்களும் வெளிப்படையாகத் தங்கள் முதலீட்டாளர்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளன. இரண்டுமே ஏவுகணைகளை அதிகம் தயாரிக்கும் நிறுவனங்கள். பணவீக்கம் காரணமாக அமெரிக்காவின் பல ஆயுத நிறுவனங்களின் பங்குகள் சரிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. உக்ரைன் போர் ஆரம்பித்த நாளிலிருந்து அவற்றின் மதிப்பு உயர்ந்துவருகிறது.

**தி.முருகன்**

ஒரு போரைப் பேரழிவாகவும் உயிரிழப்பாகவும் எளிய மக்கள் பார்த்துப் பதைபதைக்கின்றனர். கௌரவப் பிரச்னையாகவும், சண்டையில் ஏதோ ஒரு

**ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே, அடுத்த களம் உக்ரைன்தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது**



பார்க்கவும், யார் உருவாக்கிய ஆயுதங்கள் வலிமையானவை என்பதை நிரூபிக்கவும் போரே சரியான வழி.

ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே, அடுத்த களம் உக்ரைன்தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. 2017-ம் ஆண்டே உக்ரைனுக்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆயுதங்களை விற்க ஒப்புதல் அளித்தார், அப்போதைய ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப். 'இது சமாதான முயற்சிகளைச் சிக்கலாக்கி, ரஷ்ய ஜனாதிபதி புடினை போர்முனைக்குக் கொண்டுவந்து நிறுத்தும்' என்று அப்போதே பலர் எச்சரித்தனர். ட்ரம்ப் போய் ஜோ பைடன் வந்தபிறகும் இது மாறவில்லை. அமெரிக்க ஏவுகணைகள் அடுக்கடுக்காகப் போய் அங்கே இறங்கியதைப் பார்த்து வெகுண்டார் புடின். விளைவாகப் போர் வந்திருக்கிறது.

உலகின் ஆயுத சந்தையை கட்டுப்படுத்தும் முதல் 5 நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ். உலக நாடுகள் பயன்படுத்தும் 75.9 சதவிகித ஆயுதங்களை இவையே வழங்குகின்றன. இஸ்ரேல், இத்தாலி, தென் கொரியா, ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகியவை அடுத்த இடங்களில் இருக்கும் ஐந்து நாடுகள். இவை 14.4 சதவிகித ஆயுதங்களை வழங்குகின்றன.

இவற்றில் குறிப்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் மட்டுமே 57 சதவிகித ஆயுத சந்தையை வசப்படுத்தி வைத்துள்ளன. உலகின் முதல் 10 ஆயுத நிறுவனங்களில் அமெரிக்காவில் மட்டுமே ஐந்து உள்ளன. உலகின் பெரிய ஆயுத நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின், டாங்கிகளை அழிக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்குக் கொடுத்திருக்கிறது. பிரிட்டனில் இருக்கும் சாப் நிறுவனம், டாங்கிகளை அழிக்கும் ராக்கெட் லாஞ்சர்களைக் கொடுத்திருக்கிறது. ஜெர்மனி, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை



விற்றிருக்கின்றன. வரலாற்றில் முதல் முறையாக ஐரோப்பிய யூனியன் தன் செலவில் ஆயுதங்களை வாங்கி உக்ரைனுக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளது. இயற்கைச் சீற்றங்களின்போது உதவி செய்வதற்காகத் தன்னார்வலர்களை அழைப்பதுபோல, தங்களுக்காகப் போர் புரிய தன்னார்வலர்களை அழைத்திருக்கிறது உக்ரைன். ஆயுதங்களின் வாசமே அறியாத பலர் போர்க்களத்தில் இப்போது ஆயுதமேந்தி நிற்கிறார்கள். மொத்தத்தில் ஆயுத வியாபாரம் சூடுபிடித்துவிட்டது.

28 ஆம் பக்கம் பார்க்க...









சேவியர்
(தமிழ்நாடு)

# நடுப்பக்கம்

# நெகடிவ் சிந்தனையும் தேவை எதிர் மறை சிந்தனைகளும் தேவை!

ஒவ்வொரு விஷயத்திலும் பாசிடிவ் மற்றும் நெகடிவ் விஷயங்கள் கலந்தே இருக்கின்றன. அவையே ஒரு வட்டத்தை இணைக்கும் இரண்டு புள்ளிகளாகின்றன. இரண்டும் இல்லாமல் செயல் இல்லை, இயக்கமும் இல்லை. ஜான் மெக்டனால்ட் பாசிடிவ் சிந்தனைகள் குறித்து மட்டுமே பெரும்பாலும் நாம் கேட்கிறோம். நெகடிவ் திங்கிங் என்பது சாவான பாவம் போல ஒதுக்கியே வைத்து விடுகிறோம். ஆனால் வாழ்க்கையில் இரண்டும் கலந்த நிகழ்வுகளே எழுகின்றன. சில இடங்களில் நெகடிவ் சிந்தனைகள் கூட நம்மை வழிநடத்திச் செல்லும் என்கிறார் டாக்டர். ஜேம்ஸ் டாப்ஸன்.

காரில் ஏறி அமர்கிறோம். உடனே சீட் பெல்ட் அணிந்து கொள்கிறோம். அல்லது "எல்லாரும் சீட் பெல்ட் போடுங்க" என்று சொல்கிறோம். இதன் காரணம் என்ன? ஒருவேளை ஆக்சிடன்ட் ஆச்சுன்னா என்ன பண்றது? சீட்பெல்ட் போட்டா உயிர்தப்ப வாய்ப்பு இருக்கு. இல்லேன்னா உயிருக்கே ஆபத்து தான் போன்ற எதிர்மறை சிந்தனைகள் தான் இல்லையா? விபத்து நடந்தால் எனும் எதிர்மறைச் சிந்தனை தான் நம்மை சீட் பெல்ட் அணியத் தூண்டுகிறது.



"ஒரு லைஃப் இன்சூரன்ஸ் வாங்கி வைக்கணும்ங்க. ஒருவேளை நாம பொட்டுன்னு போயிட்டா பிள்ளைங்க நாளைக்கு நடுத் தெருவில நிக்கக் கூடாது" என பரிதவிக்கும் ஒரு தந்தையிடமும் ஒரு நெகடிவ் சிந்தனையே எழுகிறது. அந்த எதிர்மறைச் சிந்தனை தான் அவரை ஒரு ஆயுள் காப்பீடு வாங்க தூண்டுகிறது.



கஞ்சா பொட்டலம் கையில் இருந்தாலும் தூக்கித் தூர எறியவேண்டும் எனும் எண்ணம் தோன்றுவதில் கூட கொஞ்சம் நெகடிவ் சிந்தனை இருக்கும். "இதைச் சாப்பிட்டு, இதுக்கு அடிமையாகி, உருப்படாதவனா, கெட்டவனா, நோயாளியா வாழ்வதா?" என்பன போன்ற எதிர் சிந்தனைகளே தீய பழக்கங்களை விட்டு நம்மை விலக்குகிறது. "நாம் செய்கின்ற இந்தச் சிற்றின்பத் தப்பு வெளியே தெரிஞ்சா என்ன ஆகும்" எனும் பயம் கலந்த நெகடிவ் சிந்தனை தான் நம்மை அந்த விஷயத்தை விட்டு வெளியே செல்ல தூண்டுகிறது.

எனவே நெகடிவ் சிந்தனை என்பது ஒட்டு மொத்தமாகக் கெட்டதல்ல. அது சில நல்ல முடிவுகளை எடுக்க நமக்கு உதவுமானால் அந்த சிந்தனைகள் நல்லதே. எந்த முடிவை எடுத்தாலும் அதை புத்திசாலித்தனத்துடனும், நல்ல சிந்தித்தும் எடுங்கள் என்கிறார் டாக்டர் ஜேம்ஸ் டாப்ஸன் சொல்லும் அறிவுரையாகும்.

மெல்லிய நெகடிவ் அலைகள் நம்மைச் சுற்றி அதிக அலர்ட் ஆக இருக்க வைக்கும். நாம் சார்ந்த சூழலைக் குறித்த விழிப்புணர்வு நமக்கு அதிகம் இருக்க உதவும். கொஞ்சம் நெகடிவ் சிந்தனை இருப்பது நல்லதே என்கிறது "நியூ சவுத் வேல்ஸ்" பல்கலைக்கழக ஆய்வு ஒன்று. நேர் சிந்தனைகளையும், சில நேர் விளைவுகளையும் நெகடிவ் சிந்தனைகள் உருவாக்கி விட முடியும்.

எதிர் சிந்தனைகளின் விளைவுகள் பாசிடிவ் ஆக இருந்தால், அல்லது எதிர் சிந்தனைகள் நம்மை ஒரு எச்சரிக்கை உணர்வுக்கு கூட்டிச் சென்றால் அதை வரவேற்பதில் தவறில்லை. "நாய் கடிக்குமோ" எனும் பயத்தில் வெறிநாய்களை விட்டு விலகிச் செல்வது ஒரு எச்சரிக்கை

17 ஆம் பக்கம் பார்க்க...





# நெகடிவ் சிந்தனையும் தேவை எதிர் மறை சிந்தனைகளும் தேவை!

உணர்வு. ஓடும் யானைக்கு எதிரே நிற்காமல் விலகி நிற்பது புத்திசாலித்தனமான முடிவு. கடுகடுப்பான பாஸ் திட்டக் கூடும் என கவ னமாய் இருப்பது நல்லது. இப்படி எதி

ர்மறைச் சிந்தனைகளெல் லாம் செயல்களை நேர்கோட்டில் கொண்டு நிறுத்தினால் அவை வரவேற்கப்பட வேண்டியதே.

உலக இலக்கியங்களில் பலவும் மனிதர்கள் உணர்ச்சியின் மிகுதியால் இருக்கும் போது உருவானவையே. தார்மீகக் கோபம், காதலின் சோகம், துரோகத்தின் கசப்பு இவையெல்லாம் உலக இலக்கியங்களில் உன்னத இடத்தைப் பிடித்திருக்கின்றன.

பாசிடிவ் விஷயங்கள் நெகடிவ் செயல்களை ஏற்படுத்துவதுண்டு. ஹிரோஷிமாவை அழித்துத் துவம்சம் செய்த அணுகுண்டைப் போல. நெகடிவ் விஷயங்கள் நம்மை பாதுகாப்பதும் உண்டு,கார் சீட் பெல்ட் போல.எந்த விஷயத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம்.

மரணம் குறித்த சிந்தனை நம்மை வாழத் தூண்டவேண்டும். நெகடிவ் சிந்தனை நம்மை பாசிடிவ் வாழ்க்கைக்கு வழிநடத்த வேண்டும். அது தான் முக்கியம்!

---



# யேசுவின் உயிர்ப்பு சொல்லும் செய்தி !

இயேசு சிலுவையில் அறையப்பட்டார், உயிர் விட்டார். அவரது உடலை இன்னொருவருக்காகத் தயாராக்கி வைத்திருந்த கல்லறைக் குகையில் அடக்கம் செய்தார்கள். ஒரு பெரிய கல்லை உருட்டி அந்த குகையை மூடினார்கள்.

மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார். உருட்டி வைக்கப்பட்டிருந்த கல் புரட்டப்பட்டது! உள்ளே இருந்த உயிர் உயிர்பெற்றது! இயேசு மரணத்தை வென்று மகிமை பெற்று எழுந்தார். கிறிஸ்தவத்தின் மையம், இயேசுவின் உயிர்த்தெழுதலில் நிலை கொள்கிறது. உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொண்டு, பாவங்களை அறிக்கையிடுபவர்களை இயேசு மன்னிக்கிறார். அவர்களுக்கு நிலை வாழ்வைத் தருகிறார் என்பதே கிறிஸ்தவ ஆன்மிகத்தின் சாராம்சம்.

இந்த ஆன்மிக அர்த்தங்களைத் தாண்டி, இயேசுவின் உயிர்ப்பு நமக்கு நிறைய விஷயங்களைக் கற்றுத் தருகிறது.

## 1. இறவா இலட்சியம் வேண்டும்!

இலட்சியத்தின் மீதான பிடிப்பு நமக்கு இருக்க வேண்டும் என்பதை இயேசுவின் சிலுவைப் பாடுகளும் உயிர்ப்பும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. என்ன தான் தொந்தரவுகள் வந்தாலும், என்ன தான் வலிகள் வந்தாலும், இலட்சியத்தை விட்டு விலகாமல் இருந்தார் இயேசு. இலட்சியத்துக்காக உயிரைக் கொடுப்பவர் மத்தியில், உயிரைக் கொடுப்பதே இலட்சியம் என தனது வாழ்க்கையை பிறருக்காய் கொடுத்தார் இயேசு. இலட்சியத்திலிருந்து விலகா நிலையை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

## 2. விடா முயற்சி வேண்டும்!

உயிர்ப்பு கற்பிக்கும் பாடங்களில் இன்னொரு முக்கியமான பாடம் விடா முயற்சி. நமது போராட்டங்களோ நமது சிந்தனைகளோ தெளிவாக இருக்கும் போது அதை நோக்கிய விடா முயற்சி நமக்குத் தேவை. இயேசுவின் விடா முயற்சி வியப்பூட்டுகிறது.

சிலுவையின் காலத்தில், கூடவே இருந்த நண்பன் துரோகத்தின் முத்தத்தைச் சூடினான். இறப்பிலும் வருவேன் என்றவன் நெருப்பின் அருகே தடுமாறி மறுதலித்தான். ஆடைபோல் தொடர்ந்தவன், ஆடையையும் விட்டுவிட்டு பறந்து மறைந்தான். இயேசுவோ தொடர்ந்தார். நமது கூட இருப்பவர்களே நமக்கு எதிராய் எழுந்தாலும் உடைந்து விடாமல், விடாமுயற்சியுடன் நமது பயணத்தை நாம் தொடர வேண்டும்.

## 3. தளரா தன்னம்பிக்கை வேண்டும் !

உயிர்ப்பு சொல்லும் இன்னொரு சேதி, தன்னம்பிக்கை! இயேசு தன்னை ஆழமாய் நம்பினார். அதனால் தான் முட்டை ஓட்டு மனிதர்களைப் போல அவர் உடைந்து சிதறவில்லை. பிலாத்துவின் முன்னிலையில் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டு ஓடிவிடவில்லை. தன் மீதான நம்பிக்கை அவரை நிமிர்ந்து நிற்க வைத்தது. விழிப்போம் எனும் நம்பிக்கை தான் நம்மை நிம்மதியாய்த் துயில வைக்கிறது ! தன்னால் முடியும் எனும் நம்பிக்கை தான் இயேசுவின் முடிவைக் கூட தொடக்கமாய் மாற்ற காரணமாய் இருந்தது !

## 4. விலகாத் தாழ்மை வேண்டும்!

இயேசுவின் வாழ்க்கை கற்றுத்தரும் இன்னொரு போதனை தாழ்மை ! இயேசுவின் வாழ்க்கை முழுதும் தாழ்மை இருந்தது என்றால், சிலுவையில் அது உச்சத்தை எட்டியது. கடவுள் மனிதனாய் வந்ததே தாழ்மையின் உச்சம். அதிலும் கொன்றவரையும் மன்னித்து, ஈன்றவரையும் கவனித்து, சிலுவையிலும் போதித்து இயேசு



நம்ப முடியாத தாழ்மையின் நட்சத்திரமாய் மின்னினார். அவர் இறந்தபின் சொந்தமாய் அடக்கம் செய்யக் கல்லறை இல்லை. சகோதரர்கள், உறவினர்கள் யாரும் அவரது உடலை வாங்கக் கூட வரவில்லை. இயேசு தாழ்மையின் உச்சமாய் ஏதோ ஒருவரின் கல்லறையில் துயில்கிறார்.

## 5. எளியோரை மதித்தல் வேண்டும்!

இயேசு உயிர்த்த உடன் ரோம அரசு அதிகாரிகளுக்குக் காட்சி கொடுத்திருந்தால் அது ஒரே நாளில் சாம்ராஜ்யம் முழுதும் அறியப்பட்டிருக்கும். யூதத் தலைவர்களுக்குக் காட்சி கொடுத்திருந்தால் அவர் மெசியா என்பதை சவுக்கால் அடித்து உணர்த்தியது போல் இருந்திருக்கும். ஆனால் இயேசு பிறப்பில் மட்டுமல்ல, உயிர்ப்பிலும் ஏழ்மையையே விரும்பினார். தான் உயிர்த்தபின் முதல் காட்சியை ஒரு பெண்ணுக்கு அளிக்கிறார். ஆணாதிக்க சமூகத்தில் பெண்மையை அவர் மகிமைப்படுத்துகிறார். வலியவர்களின் அவையில் ஒரு எளியவரை மேன்மைப்படுத்துகிறார்.

**இந்த சிந்தனைகளை உயிர்ப்பு சிந்தனையுடன் மனதில் இருத்து**




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!

வாமினி குமணன் |Gievelsburg-Germany

எங்களுடைய பாவங்களை நீக்கி!
எங்களை இரட்சிக்க வந்தவரே!
பாவங்களுக்கு செத்து நீதிக்கு பிழைக்க!
எங்களுடைய பாவங்களை சரீரத்தில் சுமந்தவரே!

மரத்திலே தூக்கப்பட்டவன் சபிக்கப்பட்டவன்
இயேசு கிறிஸ்துவே எங்களுக்காக சாபமானீரே
சாபத்திற்கு நீக்கலாகி மீட்டவரே
கண்ணீரை நிந்தையை நீக்கியவரே

எங்களுக்காக அசட்டை பண்ணப்பட்டவரே
சொந்தமானவர்களால் புறக்கணிக்கப்பட்டவரே
துக்கம் நிறைந்து பாடு அனுபவித்தீரே
சரீரம் கிழிக்கப்பட்டு தரையில் இரத்தம் சிந்தினீரே

எங்களுடைய மீறுதலால் காயப்பட்டவரே
எங்களுடைய அக்கிரமங்களால் நொறுக்கப்பட்டவரே
உம்முடைய தழும்புகளால் குணமாக்கினீரே
எங்களுக்கு சமாதானத்தை தந்தீரே

சிலுவையில் எங்களுக்காய் தாகம் என்றீரே
திரைச்சீலை கிழிந்து பூமியை அதிரச்செய்தீரே
கன்மலைகள் பிளந்து கல்லறைகள் திறந்தீரே
பரிசுத்தவான்கள் எழுந்திருக்கச் செய்தீரே

மரணத்தை ஜெயமாக விழுங்கினீரே
மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீரே
பாதாளத்தின் திறவுகோலை எடுத்தீரே
மரணத்தின் திறவுகோலை எடுத்தீரே

உம்சீசர்களுக்கு வாழ்க சமாதானம் என்றீரே
வாருங்கள் போஜனம் பண்ணுங்கள் என்றீரே
சத்தியம் சொல்லி நீதிமானாக்கு என்றீரே
பரலோகம் சென்று தேவதூதர்களுடன் மீண்டும்
வந்து பரிசுத்தவான்களை அழைத்துச் செல்வேன் என்றீரே

வானத்திலும் பூமியிலும் அதிகாரமுடையவரே
உலகத்தின் முடிவு பரியந்தமும்
சாலநாட்களும் உம்முடன் இருப்பேன் என்றீரே
தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவன்
பாக்கியவான் என்றீரே

-கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்
அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்-
(சங்கீ:34:8)



# கழன்று போன சில்லு

(நிஜதரிசனம்)

இயக்கச்சியில் இதயம் நின்றது
இயந்திரம் உடைந்தது போல்
இரும்படிக்கும் சத்தம்

நடந்ததை நாமுணரவில்லை
நடுரோட்டில் சில்லுக் கழன்றதென்று
நாமுணர்ந்திருந்தால்.......

படு மோசமாகியிருக்கும்– பயத்தால்
பாதி உயிர் போயிருக்கும்

சரியாமல் கொள்ளாமல்
சலனம் இல்லாமல்
சமாளித்து நிறுத்திய
சாரதிக்கு சபாஷ் சொன்னோம்
இருக்கட்டும்

பராமரிப்பை பார்த்தீரோ?

ஆண்டுக்கணக்காய்
ஆணி நட்டு மாத்தாமல்
வேண்டிய கையோடே
வேறேதும் செய்யாமல்
வெளிக்கிட்டு ஓடுகின்ற
வாகனங்களை நம்பி ....

சில்லே இல்லாமல்
சில நூறு மீற்றர்.......

சொல்லே நடுங்குமென்றால்
உள்ளே இருந்து வந்த
உள்ளம் பட்ட பாடு

நல்ல காலமொன்று
நடுவெளியில் நடந்ததிது
சில்லு இல்லையென்ற
சிந்தனையே வந்திடாமல்
வல்லமையாய் கரைசேர்த்த
வசுரைவர் அன்றிறைவன்

கதை தெரியுமோ?
கால்மணிக்கு மேல் காத்து
வேறு வசு எடுக்கும் வரை
கழன்ற சில்லுக்
கிடைக்கவில்லை
கரைமுழுதும் தேடுகிறார்

அவரவர் அதிட்டம் தான்
அமைகின்ற பயணங்கள்

கோணமலை காணப்போகும்
வாகனத்தை
கொஞ்சமேனும் பேண
வேண்டாமோ?

கோச்சி நல்லம் தான்
அதிலும் பலர்
தாச்சி விளையாடுகிறார்

சூரியன் உதிக்க முன்
வெளிக்கிட்டு
சூரியன் மறைந்தபின்
போய்ச்சேரும்
பாரிய பணிப் பயணங்கள்
எப்போது தீருமோ?

இ.போ.ச பயணமும்
சம போசா சாப்பாடும்
எப்போது மாறுமோ?



குரும்பையூர்
த.ஐங்கரன்
(இலங்கை)








# 150 வருடங்கள் வரை வாழ்வோமா?



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

இன்று புவியில் வாழும் மனிதன் சராசரியாக 72.6 வருடங்கள் வரை வாழ்கின்றான். நாம் எந்த நாட்டில் வாழ்கின்றோம், அந்த நாட்டின் தொழினுட்ப மற்றும் மருத்துவ வளர்ச்சி போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நாம் வாழும் காலம் நீடிக்கலாம் அல்லது குறைந்தும் போகலாம். ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? நமது உடல் 150 வருடங்கள் வரை வாழக்கூடியதாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் நம்புவீர்களா? ஆம், முடியும் ஆனால் அதற்குப் பல விதமான முன்நிபந்னைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவை எவை என்பதை மட்டுமில்லாமல், இவ்வாறு பூமியில் அனைவரும் 150 வருடங்கள் வரை வாழ்ந்தால் நம் நிலை எவ்வாறு இருக்கும் என்பதையும் அறிய விரும்பினால் தொடர்ந்து படியுங்கள்.

இன்று வரை அதிக வருடங்கள் வாழ்ந்தவர் என்கின்ற பட்டியலில் முதல் இடத்தை Jeanne Calment எனும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஒரு பெண் பிடித்துள்ளார். இவர் 122 வருடங்கள் 165 நாட்கள் வரை வாழ்ந்தார். எனவே 150 வருடங்கள் வரை வாழ வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும். அதற்கு நான் ஆரம்பத்தில் கூறியது போல் ஒரு சில முன்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். குறிப்பாக நாம் இறப்பதற்குக் காரணமாக இருக்கும் காரணங்கள் அதாவது நோய்களையும் விபத்துகளையும் நீக்க வேண்டும். அதைத் தொடர்ந்து விஞ்ஞானத்தின் மற்றும் நவீன தொழினுட்பங்களின் உதவியுடன் நமது உடல் உறுப்புகளை மாற்றி அமைக்கக் கூடிய நிலை வர வேண்டும். அதாவது பழுதடைந்த உறுப்புகளுக்குப் பதிலாக, உதாரணத்திற்கு இருதயம், ஒரு கை, நுரையீரல் அல்லது கண்கள் போன்றவற்றைச் செயற்கையாக உருவாக்கிய ஒரு இருதயம், கை, நுரையீரல் அல்லது கண்களால் மாற்றி அமைக்கக்கூடிய ஒரு நிலைமை வர வேண்டும். இது எல்லாம் இருந்தால் தான் நாம் 150 வருடங்கள் வரை வாழ்வதற்கான அடிப்படை உருவாகும்.

சரி இது எல்லாமே நமது புவியில் காணப்படுகிறது என்று எடுத்துக்கொள்வோம். எல்லோருமே 150 வருடங்கள் வரை வாழ முடியும். இனி என்ன? இதன் விளைவு என்ன ஆகும்? வாங்க அதையும் பார்க்கலாம்.

இதனால் ஒரு மாபெரும் பிரச்சனை உருவாகிவிடும். 150 வருடங்கள் வரை மனிதர்கள் வாழ்கின்றனர் என்றால், பூமியில் வாழும் மனிதர்களின் எண்ணிக்கை மலமடங்கிற்கு அதிகரித்து விடும். இதன் விளைவாக உணவு தட்டுப்பாடு ஏற்படும். குறிப்பாக இன்றைய காலத்திலேயே உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் உணவு கிடைப்பதிலில்லை. இந்நிலையில் சனத்தொகை அதிகரித்தால் எவ்வாறு அது சாத்தியமாகும்? எனவே இதற்கு என்ன செய்யலாம்? மிகச் சுலபமான ஒரு தீர்வு ஒன்று தான். நாம் உணவு வீணாக்குவதை நிறுத்த வேண்டும். உலகெங்கும் உற்பத்தி செய்யப்படும் உணவில் 25% வரை குப்பைக்குள் போகின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? இதை விட இறைச்சி உற்பத்தியினால் சூழல் மாசடைதல் அதிகரித்துக்கொண்டு போவது மட்டுமில்லாமல், அதற்கு நமது புவியின் 40% நிலம் தேவைப் படுகிறது. சனத்தொகை அதிகரிக்கும் வேளையில் அந்த 40% நிலம் மனிதர்கள் வாழ்வதற்கு அத்தியாவசியமாகிவிடும். எனவே இதன் விளைவாக மனிதர்கள் அதிகளவில் தாவர அடிப்படையில் உருவாக்கப்பட்ட உணவுகளை உண்பதற்கு முயலவேண்டும். அதற்காக முற்றிலும் அவ்வாறு உண்ண வேண்டும் என்று இல்லை. கடலுணவுகள் மற்றும் முட்டையில் மிக முக்கிய ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன. அவற்றையும் நமது சாப்பாட்டில் சேர்க்க வேண்டியது அவசியமாகும். 150 வருடங்கள் வரை வாழ்வது என்றால் 67 வயதில் வேலையை நிறுத்தி விட முடியாது. நிறுத்திவிட்டு என்ன செய்வது? மீதியிருக்கும் 83 வருடங்கள் வீட்டில் வருமானம் இல்லாமல் எப்படி இருக்க முடியும்? ஆகவே நாம் மேலும் பல ஆண்டுகள் வேலை செய்யத் தான் வேண்டும். அவ்வாறு செய்தால் தான் நமது மூளைக்கும் உடலுக்கும் வேலை கொடுக்கலாம்.

இதைத் தவிர்த்து உலகில் சராசரியாக வாழும் திருமணமாகிய தம்பதிகள் 7 வருடங்கள் வரை தான் சேர்ந்து வாழ்வார்களாம். இது உலகில் வாழும் அனைத்து தம்பதிகளை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட கணிப்பீடு ஆகும். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இது வேறு பட்டு இருக்கலாம். சரி இருந்தாலும் உலகின் சராசரியான 7 வருடங்களையே எடுத்துக்கொள்வோம். அப்படி என்றால் 150 வருடம் வரை வாழும் மனிதன் எத்தனை திருமணங்களைச் செய்வான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். அது மட்டுமில்லாமல் பிள்ளைகள் பெறும் வயதும் அதிகரித்து விடுமாம். இன்று வரை அதிக வயதில் ஒரு பிள்ளையைப் பெற்ற ஒரு தாயின் வயது 73 ஆகும். 150 வருடங்கள் வரை வாழும் மனிதனும் இன்று போல் 20-40 வயதளவில் பிள்ளைகள் பெறாமல் 70 வயதிற்குப் பிறகு தான் பிள்ளைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று எண்ணப்படுகிறது. அது மட்டுமில்லாமல் ஒவ்வொரு வருடமும் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறையும் என்பது விஞ்ஞானம் சொல்கிறது.

என்ன தான் 150 வருடங்கள் வரை வாழலாம் என்பது பலருக்குப் பிடித்த ஒரு விஷயமாக இருந்தாலும் கூட, இதன் விளைவுகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இதில் உள்ள சுவாரசியம் என்னவென்றால், விஞ்ஞானத்தின் மற்றும் நவீன தொழினுட்பத்தின் வேகத்தினால் நமக்கு இவ்விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு நேரம் இருக்குமா என்று தான் தெரியவில்லை. ஏனெனில் 150 வருடங்கள் வரை வாழ்வது என்பது வெகு தூரத்தில் இருக்கும் எதிர்காலம் கிடையாது. அது மிக அருகில் வந்து விட்டது. நாம் அதை அனுபவிக்காமல் விட்டாலும், நமக்கு அடுத்து வரும் சந்ததியினர் 150 ஆண்டுகள் வரை வாழ்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்பது தான் உண்மை ஆகும்.

சரி இனி நீங்கள் கூறுங்கள். உங்களுக்கும் 150 வருடங்கள் வாழவேண்டும் என்கின்ற ஆசை உள்ளதா?




om shakthi Astrological center

spritual Healer & psychic reader

HAND READING - LOVE READING
HOROSCOPE READING & FUTURE READING

solution: Love problem - marriage problem- Remove Badluck, Stress- Black magic & curse

sri om shakthi astrology center guruji: sriram, a very powerful astrologer, has been practicing astrology since ancient times by visiting the ashtadasha shakthi peethas in kashi and receiving om shakthi, mantra shakthi and vakshuthi through agora meditation tapas. any problem will be solved in 11 days

sri om shakthi Astrology centre காசியில் உள்ள அஷ்டாதஷ சக்தி பீடங்களுக்குச் சென்று அகோர தியான தவங்களால் ஓம் சக்தி, மந்திர சக்தி, வக்சுத்தி ஆகியவற்றைப் பெற்ற நாக துறவிகள் மற்றும் பழங்குடியனர் குருஜி: ஸ்ரீ ராம் , மிகவும் சக்தி வாய்ந்த ஜோதிடர் அன்றைய காலத்திலிருந்தே முகம், கை, ரேகை வேத்திலை போட்டு பார்த்து ஜோதிடம் பார்த்து வருகின்றனர்




PANDIT SRI RAM | Mob: 07424886222 |07417344229

Best Food Super market |30 loam pit hill, lewisham London SE13 7sw



வெற்றிமணி திருமண சேவை



மணமகன் தேவை

யேர்மனியில் MSC படித்து நெய்ஸ் நகரில் நிரந்தர வேலைசெய்யும் நற்குணம் உடைய சைவ வேளாளர் 30 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற மணமகன் தேவை.பட்டதாரிமணமகன், 75 km தூரத்துக்குள் வரவேற்கிறோம்.

பெற்றோர் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு. +49 1577 4318528

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் Gymnasium தில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உடைய சைவ வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன், 75 km தூரத்துக்குள் வரவேற்கின்றோம்.
தொடர்புகளுக்கு:- +49 1577 4318528

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்



Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# அன்று நான் பார்த்த நந்திக்கடல்!

நந்திக்கடலைப்பற்றி பெரும்பாலானவை செவி வழிக்கேட்டவைகளே அதிகம். இவைகளில் உண்மை இல்லாமலும் இல்லை. கவிஞர் முல்லையூரான் தனது ஆக்கங்களில் பெரும்பாலான இடங்களில் நந்திக்கடலின் அழகையும் செழுமையையும் குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தியிருக்கிறார். அவர் இன்று இல்லையாகிலும் அவர் படைத்த பல இலக்கியங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

பெரும்பாலான காலங்களில் கோடையில் நீர் வற்றி நந்திக்கடல் திடலாகும். நான் அன்று எழுதிய காலத்திற்கும் இன்றைய காலத்திற்கும் இடையில் நந்திக்கடல் எவ்வளவோ மாற்றங்களைக் கண்டுள்ளது. உருவத்தாலும் வளத்தாலும் மீனவர்களின் வரவின்மையாலும்நீர் இருந்தும் வரட்சியானது போல். காட்சி தருகிறது.

இந்த மாற்றங்கள் காலத்திற்குக் காலம் வரலாறாக வேண்டும். அதற்காகவே இக்கட்டுரையைப் பதிவு செய்கிறேன். எனக்குப்பின் இதன் வரலாறு எழுதுபவர்களுக்கு நான் எழுதிய காலத்தில் நந்திக்கடல் எப்படி இருந்தது என்பது தெளிவாகும். நந்திக்கடல் எங்கள் ஊரின் முக்கிய அடையாளம். சிறுவயதில் இருந்தே இதனைப் பார்த்து வளர்ந்தவன் நான். நீந்திப்பழகியதும் இந்தக்கடலில் தான். பாடசாலை நாட்களின் பெரும்பகுதி சின்னவயதில்நண்பர்களுடன் இங்கேதான் செலவழிந்தது. எங்கள் ஊரில் சிறியவர்கள் நீந்திப் பழகுவதற்கான நீச்சல் குளம் இதுதான்.

பாலத்திற்கு அப்பால் வடக்குப் பக்கமாக அமைந்திருக்கும் வடக்காறு ஆழம் அதிகம் என்பதனால் சின்னவயசில் நீந்துவதற்கு எங்களுக்கே பயமாக இருக்கும்.குறிப்பிட்ட வயசுவரை அந்தப் பக்கம் போனதில்லை.அதற்கு அறவே அனுமதியு மில்லை. நந்திக்கடல் எங்களின் விருப்பத்திற்குரியது எங்களின் சொத்துஎன்கிற இறுமாப்பும் உள்ளூர இருந்திருக்கிறது.

மாங்குளம் வீதியில் ஐஞ்சாங்கட்டை சங்கிலிப் பாலத்திலிருந்து தொடங்கும் நந்திக்கடல்.மேற்பக்கமாக வற்றாப்பளை கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு கிழக்கு வரை தொடர்ந்து பரந்தன் வீதியில் இரட்டை வாய்க்கால் மதகுகளுக்கு கீழால் ஓடிவலையன் மடம் அம்பலவன் பொக்கணைமாத்தளன்பேப்பாரைப்பிட்டிநல்ல தண்ணித் தொடுவாய்சாலைவரை தொடர்ந் திருந்து வளம் கொடுக்கும்.



பொன். புத்திசிகாமணி
(யேர்மனி)

கீழ்பக்கமாக மாங்குளம் வீதியின் வயல் வெளி கரையோரமாக இரண்டு கிலோமீற்றர் வரை சம புல்வெளி (இந்த வெளியில் தான் மாட்டு வண்டிச்சவாரி பல வருடங்களாக நடைபெற்றது.) வட்டுவாகல் வயல்வெளிக்கு மேலாக கரைச்சி வெளிதாண்டி நாங்கள் நீச்சலடிக்கும் கூர்வரை தொடரும் இங்குதான் நந்திக்கடல் முடிவடையும். இதுதான் நாங்கள் நீச்சலடிக்கும் கூர். நந்திக்கடல் முடியும் இடத்தை கூர் என்று அழைப்பதுண்டு. இதன் அந்தக்கரையும் இந்தக்கரையும் ஏறக்குறைய இருபது மீற்றர் அகலம் தான் இருக்கும். நீந்தி விளையாடுவதற்கு ஏற்றவாறு அதிக ஆழமும் இல்லை.பள்ளிக்கூடத்தில் போடும் திட்டம் நிறைவேறும் இடம் இந்தக்கூர் தான்.

பள்ளிக்கூடம் முடிந்தவுடன் அவசரமாக ஓடிவந்து கால்சட்டையைக் கழற்றி எறிந்து விட்டு ஆரும் கழற்றி எறிந்த கோவணத் துண்டுகளை எடுத்துக் கட்டிக்கொண்டு குதூகலத்துடன் நீச்சலடித்த காட்சி மனதில் விரிகிறது. அந்தக்கரைக்கும் இந்தக் கரைக்குமாக போறதும் வாறதுமாக நீச்சல் அடிப்போம். நீருக்கு அடியால் சுழியோடி அந்தக் கரைவரை போவதும் குதூகலம் தான்.

இரவு நேரத்தில் இந்த இடத்தில் அதிகம் றால் வீசுவதால் சேறின்றி மணலாக இருக்கும்.அது எங்களுக்கு வசதியாக இருந்தது. இதன் அருகில்தான் எங்கள் சப்தகன்னிமார் ஆலயம். ஆலயம் இருந்த இடம் மேடாக இருக்கும். வீட்டில் தேடுவார்கள் என்ற நினைப்பே இல்லாமல் சந்தோசத்தில் பொழுது கழியும்.பள்ளிக்கூடம் முடிந்தும் இவ்வளவு நேரம் பிள்ளைகளைக் காணவில்லையென்று வீட்டில் தேடத் தொடங்கி விடுவார்கள்.

நிமிர்ந்து பார்த்தால் நீளத்தடியுடன் கோயில் புட்டியில் அம்மா தடியோடை நிற்பா காளிமாதிரி. கூப்பிடுற தொனியில் தண்ணீருக்குள் மூத்திரம் போய் விடும். அவ்வளவு பயம்.கரைக்கு வரவே பயமாக இருக்கும். என்ன செய்வது வந்தே ஆகவேணும். அம்மாவின் கைத்தடி அந்தமாதிரி விளையாடும்.மூன்று குற்றச்சாட்டுகள் பள்ளிக்கூடம் விட்டு சொல்லாமல் கொள்ளாமல் வந்ததற்கு நீச்சலடித்துகடலில் மூழ்கிச் சாகப்போறியோ என்று அடுத்து ஆற்றையும் கோவணத்துண்டை எடுத்துக் கட்டியதற்கு.

இரண்டொரு நாளில் இதையெல்லாம் மறந்து விடுவோம் மீண்டும் இதே பல்லவிதான்.இரண்டு ஒல்லித்தேங்காய்களைக் கட்டி பழகிய நீச்சல் பயிற்சி பின்னாளில்

28 ஆம் பக்கம் பார்க்க...








# இலக்கியத்தில் இவர்கள்... 20



கௌசி (யேர்மனி)



# கல்யாண சமையல் சாதம்

கல்யாண சமையல் சாதம் காய் கறிகளும் பிரமாதம். இந்த கௌரவப் பிரசாதம். இதுவே எமக்குப் போதும். புளியோதரையும் சோறும் வெகு பொருத்தமா சாம்பாரும் பூரிக் கிழங்கு பாரு“ இந்தச்சமையல் இலக்கியச் சமையலா? இல்லை காய்கறிச் சமையலா? இவை இரண்டும் இந்த உலகத்தில் மனங்கவரும் மந்திரங்களே. உயிரும் உடலும் உள்ளமும் வளர்க்கும் மகான்கள் இலக்கியச் சமையலையும் அடுப்படிச் சமையலையும் இரசிப்பார்கள். இச்சமையல் இக்கால கட்டத்திலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் எவ்வாறு பேசப்படுகின்றது என்பதே இம்மாத சிந்தனை.

புருஷன் வீட்டில் வாழப்போகும் பெண்ணுக்கு சொல்லும் அறிவுரைகளில் ஒன்று காலைவேளை எழுந்து வாசலிலே நீர் தெளித்துக் கோலம் போட்டு சமையல் வேலையைத் தொடங்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் அப்பன் பாட்டன் பெயர் கெட்டுப் போகும் என்பார்கள். குடும்ப வாழ்க்கைக்கு சமையல் முக்கியமாகப் பேசப்படுகின்றது. ஆனால், இன்று வாசலில் கோலம் போடுகின்றார்களோ என்னவோ யூரியூப் பார்த்து சமையலில் சப்பைக் கட்டு கட்டுகின்ற இளையவர்களை நாம் காண்கின்றோம்.

இன்று உலகநாடுகளின் அனைத்துப் பண்டங்களும் இளையவர்கள் அடுக்களையில் காணப்படுகின்றன. அம்மா கைப்பக்குவத்தை விட யூரியூப் சமையல் குறிப்புக்கள் அடுக்களையில் ஆர்ப்பாட்டமாக இருக்கின்றன. அரிசியும் பருப்பும் அளவாய் இருந்தால், அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள் என்பது மாறி கைத்தொலைபேசியும் இணையத்தொடர்பும் இருந்தால் ஐந்து வயதுப் பெண்ணும் ஆக்கிப் போடுவாள் என்றாகி விட்டது. சமைப்பது மட்டுமல்ல சமைத்த உணவு இன்ஸ்ரகிராம் எல்லாம் வண்ணம் வண்ணமாய் காட்சிப்படுத்தப்படுகின்றது. திரௌபதி கையிலிருந்த அட்சயபாத்திரத்தில் அள்ள அள்ளக் குறையாது உணவு வந்து கொண்டிருந்தது போல் யூரியூபில் பார்க்கப் பார்க்க குறையாத சமையல் குறிப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன.

இச்சமையலிலே நிற்பன, நடப்பன, ஊர்வன, பறப்பன, பறிப்பன, தோண்டி எடுப்பன என விதம் விதமாக பல் நாட்டுக் கலாச்சார உணவுகளும் பரிமாறப்படுகின்றன. இதில் தமிழன் பண்பாட்டின் ஓர் அம்சமான விருந்தோம்பலும் இடம்பெறுகின்றது. அந்தக்கால சமையல் முறைகளை சங்க கால இலக்கியங்களான பெரும்பாணற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, போன்ற பாடல்களிலும், நாலாயிர திவ்யபிரபந்தம், பெரியபுராணம் எனப் பல நூல்களில் பாடல்கள் மூலமாக விளக்கியிருக்கிறார்கள். சங்கக்காலத்தில் சோற்றை அடிசில், அயனி, அவிழ், கூழ், சொன்றி, நிமிரல், புழுக்கல், புன்கம், பொம்மல், மிதவை, மூரல் என்ற சொற்களினால் பயன்படுத்தியுள்ளார்கள். வரகரிசி, தினையரிசி, புல்லரிசி, மூங்கிலரிசி போன்ற அரிசி வகைகளை உண்டிருக்கின்றார்கள்.

அகநானூற்று 393 ஆவது பாடலிலே வேங்கட மலையில் வாழ்ந்த இடையர்கள் விருந்து படைக்கும் முறை அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நீண்டு வளர்ந்த காதுகளுடைய இடையர் குல பெண்கள், கொல்லையில் உள்ள வரகினை எடுத்து வந்து, உலக்கையில் போட்டு குற்றி, உமியைப் போக்கி சுளகினால் கொழிக்கப்பட்ட வெண்மையான வரகரிசியை தண்ணீர் ஊற்றி ஊறவைத்தனர். மண்ணால் செய்த பானையில் அருவியில் இருந்து விழும் சுனை நீரை ஊற்றி, அந்த அரிசியைப் பின்பு சோறாக்கித் தாம் உண்டதுடன் வழிப்போக்கர்களுக்குக் கொடுத்துள்ளார்கள்.

> “வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
> முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
> பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
> வெண்புடையக் கொண்ட துய்த்தலைப் பழனின்
> இன்புளிக் கலந்து மாமோ ராகக்
> கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து“

என்னும் வரிகளிலே மானுடைய கொழுப்பான பகுதியில் சமைக்கப்பட்ட கறியும், பன்றிக் கறியும், உடும்புக் கறியும் சமைத்து அத்துடன் புளியும் மோரும் சேர்த்துச் சமைத்த மூங்கில் அரிசிச் சோறும் சேர்த்து விருந்து கொடுத்ததாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் குறிஞ்சிநில விருந்து பற்றிப் பாடியுள்ளார்.

மன்னன் தன்னிடம் வந்த வறிய பாணனுக்கு செம்மறி ஆட்டின் இறைச்சியை தணலில் வாட்டி அந்த இறைச்சியுடன் முல்லை மொட்டுப் போன்ற அரிசிச் சோற்றையும் அவன் கழுத்துவரை நிறையும் படி உண்ணக் கொடுத்தான் என்று பொருணராற்றுப் படையிலே ஒரு பாடல் இருக்கின்றது. உடும்பு இறைச்சிக் கறியுடன் சிவப்பரிசிச் சோற்றை உண்டதாக பெரும்பாணாற்றுப்படையில் ஓர் பாடல் எடுத்துரைக்கின்றது

முல்லைநில மக்கள் வரகரிசிச் சோறும் அவரைப் பருப்புக் கூட்டும் உண்டதாகவும் மருதநில மக்கள் வெள்ளை அரிசிச் சோறும் நண்டுக் கறியும் ஏழைகளுக்கு உண்ணக் கொடுத்ததாக சிறுபாணாற்றுப் படை எடுத்துக் காட்டுகின்றது. இது இவ்வாறாக இருக்க கடலும் கடல் சார்ந்த பகுதியிலும் வாழ்ந்த மக்கள் கள்ளும் குழல் மீனின் சுட்ட கருவாடும் விருந்தினருக்குப் படைத்திருக்கின்றார்கள்.

நெய்தல் நில மக்களுடைய இவ்வுணவு வைரமுத்துவின் “உப்புக்கருவாடு ஊற வைச்ச சோறு ஊட்டிவிடத் தோணுதடி எனக்கு“ என்னும் பாடலும் கங்கை அமரன் வரிகளில் க்ஷக்ஷநித்தம் நித்தம் நெல்லுச் சோறு நெய் மணக்கும் கத்தரிக்கா நே-த்து வச்ச மீன் குழம்பு என்னை மயக்குதையா, பச்சரிசிச் சோறு உப்புக் கருவாடு சின்னமனூரு வாய்க்கால் சேறு கண்ட மீனு“ என்னும் பாடலும் நெஞ்சுக்குள் நிழலாடுகின்றது.

இவ்வாறு பீட்ஸாவும் பேர்கரும் விலைப் போகும் காலத்திலே இன்னும் இலக்கியப் பெண்கள் போல் காணொளிச் சமையல் பெண்களும் வாழுகின்றார்கள்.




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# அத்தியவசிய பொருள் தலைக்கு மேல் விலையேற்றம், மக்களின் அழுகுரல்



நாட்டில் ஏற்பட்ட சடுதியான விலையேற்றம் காரணமாக மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதுமட்டுமல்லாது சில பொருட்களின் தட்டுப்பாடும் நிலவுவதனால் மக்கள் வீதிக்கு இறங்கி நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தாலும் கூட அதனை உரிய தரப்புக்கள் கண்டு கொள்வதில்லை இதனால் பொருளாதார சிக்கல் மக்களை வாட்டி வதைத்துள்ளது.பெற்றோல் டீசல் எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரும் வாகனங்கள் பல மணி நேரம் காத்திருந்தும் டீசலை பெற்று வருவதுடன் சில மோதல் நிலைமைகளும் ஏற்படுகின்றன. குறித்த எரிபொருள் நிலையங்களில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டும் வருகின்றது. இது போன்று கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாஞ்சாலை, பெரிய கிண்ணியா, அடப்பனார்வயல்,குட்டிக்கராச்சி முதலான பகுதிகளிலுள்ள பேக்கரி உற்பத்திப் பொருள் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

கோதுமை மாவின் விலையேற்றம் காரணமாக சில பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. பேக்கரி உரிமையாளர்கள் சிலர் கோதுமை மாவைப் பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை பாவனையாளர்களும் பேக்கரி உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாவுக்கு முன்னரெல்லாம் 2 ரூபா, 4 ரூபா தான் விலை ஏறும். இப்ப 35 ரூபா உயர்ந்துள்ளது. இந்த மாவினால் எப்படி வேலை செய்றது.

இந்த அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது. வழிநடத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்துள்ளது.

விலை குறையுமா?குறையாதா? மேலும் மேலும் அதிகரிக்குமா?

5 ரூபா 10 ரூபா மாவிலையானது காலத்திலிருந்து செய்து கொண்டிருக்கிறோம்.

நான் 40 வருடமாக இந்தத் தொழிலை செய்து வருகிறேன்.

மாவு விலை ஏற்றத்தினால் இன்று லீவு எடுக்க வேண்டியுள்ளது எனவும் பேக்கரி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

4 குடும்பங்கள் கூலி வேலை செய்கிறார்கள் அவர்களுக்குப் பாவம்சீனி விலை, மாவு விலை, ஈஸ்ட் விலை, எண்ணெய் விலை.

3000/= ரூபா விற்ற விரக இப்ப 5000/= ரூபா என்ன செய்வது ஒன்றும் புரியவில்லை .இதைச் செய்வதா, விடுவதா?

16 வருடமாக செய்து வருகிறேன் இப்படி ஒரு விலை ஏற்றத்தை எந்த ஆட்சியிலும் காணவில்லை.

கடைக்குப் போனால் ஒரு நாளைக்கு ஒரு விலை.

வேலைக்காரர்களுக்கு கூலியை கூட்டிக் கேட்கிறார்கள்,இப்ப அவர்களும் வருவதில்லை.

இந்த நிலையில் நாம் என்ன செய்வதுஅரசாங்கம் ஒழுங்கான நிர்ணய்க்கப்பட்ட விலையைக் கொண்டு வரனும் பாண் இல்லை, பணிஸ் இல்லை, றஸ்க் இல்லை.

பிள்ளைக்கு மாவினால் ஆன காலை, மாலை சாப்பாடு இல்லை.

ஒரு பிள்ளைக்கு 200 ரூபா செலவு போகிறது 3 பிள்ளைக்கும் 600 ரூபா போகிறது.



கூலித் தொழில் செய்ற நாங்கள் எப்படி வாழ்வது. என செய்கையாளர்கள் இவ்வாறு கருத்துரைத்தனர்.

இது தவிர சிறுபோக வேளாண்மைச் செய்கைக்கான உழுதுதல் , விதைத்தல் மற்றும் காலாவுதல் நடவடிக்கைகளில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.இவ்வாறு விவசாய நிலங்களை உழுதுவதற்கும்

24 ஆம் பக்கம் பார்க்க...

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com
aaDaa Finance 0798000100
finma : 34598 cicero : 25605



கருகுமணி புதிய தொடர்: 02


# பேரண்ட நடனம்



ஜெனிவாவிலுள்ள துகள் பௌதிகவியல் ஆய்வுக்கான ஐரோப்பிய நடுவகத்திலே இந்தியாவினால் வழங்கப்பெற்ற அண்டத்தின் அழிவையும் ஆக்கத்தையும் குறிக்கும் சிவனின் அண்ட நடனத்தை அடையாளப் படுத்தும் படிமம் வைக்கப்பட்டுள்ளது. இது 2004 ஆம் ஆண்டில் திரைநீக்கம் செய்யப்பெற்றது. அதற்கருகே சிறப்பான ஓர் உலோகத் தகடு பதிக்கப்பட்டுள்ளது. அதில் நவீன பௌதிகவியல் அறிவாளியான குசவைதழக ஊயிசய கூறிய ஓர் அரிய செய்தி எழுதப் பெற்றுள்ளது. அந்தச் செய்தி இதுதான்:

"இந்தியக் கலைஞர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிவ நடனத்தைக் காட்சிப்படுத்தும் அழகிய வெண்கலப் படிமங்களை உருவாக்கியுள்ளனர். நம்முடைய காலத்தில், அண்ட நடனத்தின் கோலங்களைக் காட்சிப்படுத்த பௌதிகவியலாளர் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதன்படி அண்ட நடனம் என்னும் உருவகம் பண்டைய புராணவியல், சமயக்கலை, நவீன பௌதிகவியல் ஆகியவற்றை ஒன்றுபடுத்துகிறது."



பேராசிரியர்
**அ.சண்முகதாஸ்**
(வாழ்நாள் பேராசிரியர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

நவீன பௌதிகவியல், பருவங்களின் சுழற்சியில் மட்டுமன்றி எல்லா உயிரினங்களின் பிறப்பிலும் இறப்பிலும் ஆக்கம் மற்றும் அழிவின் தாளம் வெளிப்படுத்தப்படுகின்றது என்று கூறுகின்றது.

நவீன பௌதிகவியலாளருக்கு, சிவனின் நடனம் துகள்களின் அணுப்பகுதியுடைய நடனமாகும் என்று அவர் கூறியுள்ளார். திருவாசகத்தில் திருச்சதகம் 8ஆம் பாடலில் மாணிக்கவாசகர் பின்வருமாறு கூறுகிறார்:

**"உழிதரும் காலும் கனலும்**
**புனலொடு மண்ணும் விண்ணும்**
**இழிதரும் காலம் எக்காலம்**
**வருவது வந்த தற்பின்**
**உழிதரு கால்அத்த உன்னடி**
**யேன்செய்த வல்வி னையைக்**
**கழிதரு காலமு மாயவை காத்து**
**எம்மைக் காப்பவனே"**

நில்லாது திரியும் காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் தத்தம் நிலைகளிலே இருந்து ஒடுங்குகின்ற காலம் எப்போது வரும். காற்று,தீ, நீர், நிலம், ஆகாயம் ஐந்தும் ஒடுங்கினால் அல்லது மிகுந்தால் தோன்றுவதுதான் 'பேர்ஊழிக்காலம்'.

இவை ஐந்தும் தனித்தனியாக மிகுவதைக் கண்டுள்ளோம். அவை வருமாறு: காற்றுச் சூறாவழியானது தீ பெருந்தீ ஆனது நீர் சுனாமியாகப் பெருகியது நிலம் பல தடவை நிற்றலை நீங்கி நடுங்கியுள்ளது. இவை நாம் ஓரளவு பட்டறிவில் பெற்றுள்ளோம். ஆனால் அவை ஐந்தும் ஒரே நேரத்தில் ஒடுங்கினால், அதுவே 'பேர்ஊழிக்காலம்' ஆகும். அப்படி அவை ஐந்தும் ஒடுங்கியதன் பின்னரும் "என் தந்தையே! உன் ஒரு கால் இடையறாது ஓய்வின்றி அசைந்தாடிக்கொண்டிருக்கிறது" என்று மணிவாசகர் கூறுகிறார். அதுதான் பேரண்ட நடனத்தை ஆடிக்கொண்டிருக்கும் சிவனின் கால் ஆகும்.

துகள்களின் அணுப்பகுதியுடைய நடனமாக நவீன பௌதிக வியலாளர்கள் பெற்ற தரிசனத்தை நம்முடைய மெய்யடியார்கள் சிவனின் பேரண்ட நடனமாகத் தரிசித்துள்ளனர்.

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அத்தியவசிய பொருள் தலைக்கு மேல் விலையேற்றம்

உழவு இயந்திரத்தை இயக்குவதற்கும் டீசலைப் பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் மற்றும் உழவு இயந்திரச் சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளில் சிறுபோக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன சுமார் 180 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாறுசெய்கை பண்ணப்பட்டு வருகின்றனஅவ்வயல் நிலங்களை உழுதுவதற்கு உழவு இயந்திரத்திற்கான டீசல் இல்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர். அமைச்சரே கண்ணைத் திறந்து பாருங்கள் உங்கள் கண் தான் கெட்டுப் போகும் .டீசல் இல்லாமல் உழுத முடியவில்லை அறைகுறையாகவுள்ளது.இரவில் கண் விழித்து 2000/= 1500/= டீசல் வாங்கினாலும் போதாதுகவுண்டு போன ஆட்சி, வேலைக்காரர்கள் சும்மா இருக்கிறார்கள். மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுத் திரிகிறது என விவசாயி ஒருவர் தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

டீசலைப் போலினில் இருந்து மூன்று நான்கு நாட்கள் கஸ்டப்பட்டுத் தான் எடுக்கிறோம். சிறுபோக வேளாண்மையை கஸ்டப்பட்டுத் தான் செய்கிறோம் இதைச் செய்யால் விட்டால் சாப்பாடு இல்லைஉழவடிக்க, நீர் இறைக்க டீசல் இல்லை மண்ணெணைய் இல்லை எப்படி இருந்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் எமக்கும் எரிபொருள் கிடைத்தால் பெரும் உதவிசெட்டுக்குப் போனால் டீசல் இல்லை கூலியாட்கள் சும்மா இருக்கிறார்கள்பெரும் போகத்தில் சேதனப் பசளை தந்து விவசாயம் அழிந்து போயிற்று 10,12 மூடைகள் அறுவடை செய்தது போல இப்ப டீசல் இல்லாமல் உழுத முடியாமல் உள்ளது.

### தோட்டச் செய்கையாளர்

அத்துடன் வாழை, தென்னை தோட்டச் செய்கையாளர்களும் நீர்ப்பாய்ப் பதற்கான நீர்ப்பம்பிக்கான மண்ணெண்ய் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர். நிலத்தை உழுதுவதற்கான உழவு இயந்திரத்துக்கான டீசல் இல்லாததனால் சிறு போகத்தைச் செய்வது கஸ்டம். எனவே டீசல், மண்ணென்ணைய் கிடைப்பதற்கு உதவி செய்யுமாறு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்

ஒட்டு மொத்தமாக நாடு போகின்ற போக்கில் பாமர மக்களின் நிலை எப்படி ஆகுமோ என தெரியாத நிலையில் மக்கள் மனது துடி துடிக்கிறது. இதற்கு யார் பொறுப்பு எனவும் மக்களின் துன்ப துயரங்களை கண்டு கொள்ளாதவர்கள் இன்று இருக்கிறார்கள்.




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# யேர்மனியில் கவிதா லட்சுமி அவர்களுடன் 'தமிழ் வழி ஆடல்' பற்றிய உரையாடல் நிகழ்வு

கடந்த 25.02.2022 யேர்மனியில் நோர்வேயில் இருந்து வருகை தந்திருந்த நடன ஆசிரியையும் எழுத்தாளருமான கவிதா லட்சுமி அவர்களுடன் 'தமிழ் வழி ஆடல்' குறித்த உரையாடல் ஒன்று டோட்மூண்ட் தமிழர் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யேர்மனியில் பரதா நாட்டியம் கற்பிக்கும் ஆசிரியைகள், மாணவிகள் பங்குபற்றியிருந்தார்கள். இந்நிகழ்வு, 'தமிழ் வழி ஆடல்' மிக முக்கிய ஆரம்பப் புள்ளியாக அமைந்தது.



சமஸ்கிருதமயப்படுத்தப்பட்டிருக்கும் கலையான பரதநாட்டியத்தை மீட்டெடுக்க வேண்டும் என்பதில் கவிதா லட்சுமி அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார். தொல்காப்பியத்தில் இருந்து சிலப்பதிகாரம் வரை தமிழர்களின் ஆடல்கலை குறித்து விரவியிருக்கும் தகவல்களை கவிதா லட்சுமி அவர்கள் நிகழ்வில் பகிர்ந்து கொண்டார். தமிழர்களின் ஆடல் கலையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

கேள்விகளும், பதில்களும், கருத்துப் பகிர்வுகளுமாக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. தமிழர்களின் ஆடல் கலை குறித்த நிகழ்வு ஒன்றை எதிர்காலத்தில் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்கின்ற உத்வேகத்தை இந்த உரையாடல் எல்லோருக்கும் கொடுத்திருக்கிறது.

# சைவசிக்கின், சோயாசிக்கின், சோயாமட்டின்



சைவசிக்கின், சோயாசிக்கின், சோயாமட்டின். இவையெல்லாம் சோயா கலந்து செயற்கை முறையாக செய்யப்படுவது. சீனாவே இதன் பிறப்பிடம். இதில் வேண்டப்படாத வேதிப்பொருள்கள் சுவைக்காக சேர்க்கப்படலாம். சேர்க்கப்படும் Ingredients பற்றி சரியான விபரம் சீன தயாரிப்புகளில் தரப்படுவதில்லை.


ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய தமிழ்க் கடைகளில் நாட்டுக் கோழிகள் என விற்கப்படுவது, பண்ணைகளில் முட்டை இட்டு ஓய்ந்து போன முத்தின பேட்டுக் கோழிகளே. வெள்ளைக்காரன் இதை 'சுப்' வைக்கவே பாவிப்பான் இவற்றை ஆங்கிலத்தில் Steamer or Sup chicken எனச் சொல்வார்கள். இதில் சதை அதிகம் இருக்காது. காரணம் இவை முட்டைபோடும் இனங்கள். சதைவைக்கும் கோழி இனங்களல்ல. கோழிகள் பண்ணைகளில் இடும் முட்டை சைவ முட்டை. பண்ணை முட்டையில் கரு உயிர் இல்லை.

பண்ணைகளில் பேடுகள் சேவலுடன் சேருவதில்லை. பேடுகளுடன் சேவலை பண்ணையில் வளர்த்தால் பண்ணைக்காரனுக்கு படுநட்டம் வரும். இந்த முத்தின சேவலை இறைச்சிக்கு விற்கவும் முடியாது.

**நன்றி:**
**ஆசி கந்தராஜாவின் டயறிக் குறிப்பு 14**





# என்னை வழிநடத்தும் பரதக்கலை!



## பரதக்கலை மீது அதீத காதல் கொண்ட இளம் கலைஞர் தர்ஷாஹினி ஜெகநாதன் உங்களுடன் பேசுகிறார்

தற்போழுது தர்ஷனசேத்ரா என்னும் கலைக்கூடத்தை ஆரம்பித்து நடர்ந்தத்தி வருகிறேன். அதில் பயிற்சி பேரும் மாணவர்களுக்கு முறையாக பரதநாட்டியம் கற்றுக்கொடுப்பதுடன் கதக் நடனத்தையும் கற்றுக்கொடுக்க முடிவுசெய்துள்ளேன். வெறும் பாடசாலை பரீட்சைச்சக்கான கற்பித்தளோடு நின்றுவிடாமல் எல்லை இல்லாத கடலாக பறந்து விரிந்து இருக்கும் பரதநாட்டிய கடலில் அவர்களை மூழ்கி முத்தெடுக்க செய்யும் ஆர்வத்தை அவர்களுக்குள் புகுத்தி இலங்கையின் புதிய பரதநாட்டிய வரலாற்றுக்கு பாலமாக சிறந்த ஆற்று கையாளர்களாக அவர்களை உருவாக்க வேண்டும் என்பதே இந்த கலைக்கூடத்தின் நோக்கம்.

### தொழில் பற்றி

முழுநேரமும் கலையுடன் வாழும் வாய்ப்பு கிடைத்தால் வரமாக அதை நான் ஏற்றுகொள்வேன். நான் கற்றுக்கொண்டது வெறும் கைமண் அளவே. எனக்கு எப்பொழுதும் கலையை மென்மேலும் கற்றுக்கொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் இருக்கிறது. கலையுடன் பயணிக்குக்கும் போது மட்டுமே நிறையவிடயங்களை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். வேறு வேலைக்கு செல்லவேண்டிய நிர்பந்-தம் ஏற்பட்டாலும் எனது கலைகூட-த்தை தொடர்ந்து நடர்துவத்தோடு சிறந்த ஆசிரியராகவும், ஆற்றுகைக்கலை ஞராகவும், இனிவரும் நடன கலைஞர் களுக்கு முன்மாதிரியாகவும் இலங்கை



தர்ஷனசேத்ரா கலைக்கூடம் (இலங்கை)

யின் பரதநாட்டிய கலையை அடுத்த கட்டத்தை நோக்கி நடர்த்துவதற்க்கு என்னாலான கலைப்பணியை காலம் முழுவதும் செய்யவேண்டும் என்பதே எனது ஆசை.

### கலை மீதான ஈடுபாடு

பரதநாட்டியத்தை ஆற்றுகை செய்யும் போது எப்பொழுதும் அளவில்லா மகிழ்ச்சிச்சிக்கொள்வேன். ஆரம்பத்தில் இந்த கலையை விளையாட்டாகத்தான் கற்றுவந்தேன். ஒரு காலகட்டத்தின் பின்பு அதன் மீது அளவில்லாத விருப்பம் ஏற்பட்டது, அதிலிருந்து எனது கலை தான் என்னை வழிநடத்தி வருகிறது. ஒரு துறையில் நாங்கள் முழுமையான அர்ப் பணிப்புடன் ஈடுபடும் பொழுது அதற் கான வழி தானாகவே உருவாகும் என்பது எனது நம்பிக்கை.

**எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய வெற்றிமணி பத்திரிகைக்கு மனமார்ந்த நன்றிகள்**

நான் தர்ஷாஹினி ஜெகநாதன் எனது தந்தை கணபதிப்பிள்ளை ஜெகநாதன் புங்குடிதீவை பிறப்பிடமாக கொண்டவர் னது தாய் நளினி ஜெகநாதன் யாழ்பாணத் தை சேர்ந்தவர். யுத்த காலத்தில் அவர்கள் கொழும்பிற்கு இடம் பெயர்ந்து வந்தபோது அங்கு நான் பிறந்தேன். எனது பாடசாலை படிப்பை கொழும் பிலேயே முடித்துக் கொண்டேன். தற்போது எனது தாய் தந்தையுடன் யாழ்பாணத்தில் வசித்துவருகிறேன்.

மிகச் சிறிய வயதில் இருந்தே எனக்கு நடனக் கலை மீது பேரும் ஆர்வம் இருந்து வந்தது. மேடை நிகழ்ச்சிகளில் அற்றுகை செய்ய சிறிய வாய்ப்பு கிடைத் தாலும் போதும் அந்த வாய்ப்பை இருக்கமாக பற்றி கொள்வேன். பாடசாலையில் ஒரு பாடமாக பரத நாட்டியத்தை கற்று வந்தேன். பரத நாட்டியப் போட்டிகள், விவாத போட்டிகள், பேச்சு போட்டிகளில் அதிகமாக பங்கெடுத்து கொள்வேன்.

கொழும்பு முகத்துவாரம் இந்து கல்லூரியில் எனது பாடசாலை படிப்பை 2012ம் ஆண்டு முடித்துக்கொண்டேன். எனது பாடசா லையில் அந்த ஆண்டுக்கான best performer award எனக்கு கிடைத்தது.

பாடசாலை படிப்பை முடித்ததின் பின்பு நடனத்தின் மீது இருந்த ஆர்வத்தினால் இந்தியா சென்று படிக்கவேண்டும் என்ற ஆசைஏற்பட்டது. எனது குடும்ப வருமானம் காரணமாக அப்போது எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து



27 ஆம் பக்கம் பார்க்க...






08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அன்னபூரணி

தம்பிப்பிள்ளைக்கு சொந்தக்காரர், அதால தான் தன்டை 38 அடி கொட்டுக்கு (வள்ளத்துக்கு) அம்மான்டையோ மனிசீன்டையோ பேரை வைக்காமல் அன்னபூரணி எண்டு வைச்சவர். வாங்கின சாமாங்களை தண்ணி படாம படங்கு போட்டு சுத்தி காத்துக்கு பறக்காம பாரத்துக்கு துடுப்பையும் மேல வைச்சா செல்லம்மாக்கா. விட்ட சுருட்டுப் புகையின்டை திசையையும் காத்தில கரைஞ்ச நேரத்தையும் பார்த்து வேகத்தை கூட்டிக் குறைச்சு விடிவெள்ளி பாத்து வீட்டை வந்து சேர விடியச் சாமம் ஆகீட்டிது.

ஆறு மணிக்கு வெளிக்கிட்டு காரைக்காலுக்குப் போய் ஒம்பது மணிக்கு second show பாத்திட்டு கொண்டு போன சவுக்காரம்,தேங்காய் எண்ணை ,கறுவா, கராம்பு, ஏலக்காய் எல்லாம் குடுத்திட்டு சீலை,சாரம்,சம்பா அரிசி, பட்டும் அலுமினியமும் ஏத்திக்கொண்டு வாறது வழமை. திரும்பி ஐஞ்சு மணிக்கெல்லாம் வீட்டை வந்திடலாம். இந்த ஏற்றுமதி இறக்குமதி விளையாட்டில போட்டி பொறமை கூட, போட்டுக் குடுக்கிறதும் கூடிச்சிது.

Dummy ஆ ஒரு போட்டை அனுப்பி நிலமையைப் பாத்துத் தான் உண்மையா வெளிக்கிடிறது. பனை மரத்தில ஏறி நிண்டு star toffee கவரால torch ஐ மறைச்சு பச்சை, சிவப்பு எண்டு காட்டிற சிக்னலைப் பாத்துத் தான் போய் வாறது. வாற boat ஐ விட்டுக்கலைச்சுக் கொண்டு வந்த சேர முதல் சாமாங்களை இறக்கிக் கொண்டு போயிடிவினம், இறங்கின சாமாங்கள் எந்த வீட்டை போனது எண்டு ஆராலேம் பிடிக்கேலாது ஏனெண்டால் எல்லா வீடும் ஒரே மாதிரித் தான் கட்டி இருந்தது. கடல்லை வாற boat க்கு கால்வாய் மாரி வெட்டி நேர வீட்டுக்குள்ளேயே விஉற மாதிரி ஒரு set up முந்தி இருந்தது எண்டு கதை இருந்தது.

ஆழக்கடலில் இப்பிடி ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்திட்டு, இப்பவும் நம்பிக்கையோடு ஆளுகின்ற நாளை எண்ணி சண்முகத்தாரும் செல்லம்மாக்காவும் காத்து இருக்கினம்.

**பி.கு**

அன்னபூரணி அம்மாள் என்ற பாயக் கப்பல் 1938 இல் வல்வெட்டித் துறையிலிருந்து வெற்றிகரமாக அமெரிக்காவில் பொஸ்டனுக்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் தலைமை மாலுமியாக இருந்தவர் தண்டையல் கனகரத்தினம் தம்பிப் பிள்ளை என்பவர் ஆவார்.

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## என்னை வழிநடத்தும் பரதகலை

கலைத்துறையை எனது துறையாக தெறிவு செய்ததினால் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருந்த போதிலும் கலை மீது கொண்ட ஆர்வத்தினால் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைகழகத்தில் நடத்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு நுண்கலைமாணி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துகொண்டேன். பல்கலைகழக படிப்பின் போது அதில் திறமையாக செயற்பட்டதன் விளைவாக அந்த வகுப்பு மாணவர்களிடயே சிறந்து விளங்கியத்தோடு அதே பல்கலைகழகத்தில் ஒருவருடம் தற்காலிக விரிவுரையாளராக கடமை ஆற்றும் வாய்ப்பு பெற்றுக்கொண்டேன். அதன் பின் முதுகலைமாணி பட்டப்படிப்பினை இந்தியாவில் தொடர்வதற்காக ICCR ( Indian Council for Cultural Relations) Scholarship க்கு விண்ணப்பித்து நேர்முகதேர்வில் கலந்து கொண்டு ICCR Scholarship பெற்று The Maharaja Sayajirao University of Baroda எனும் பல்கலைகழகத்தில் எனது முதுகலைமாணி பட்டப்படிப்பினை ஆங்கில மொழி மூலம் வெற்றிகரமாக முடித்துக் கொண்டேன்.

எனது முதுகலைமாணி பட்டபடிப்பின் போது இதுவரை அந்த பல்கலைக்கழகத்தில் யாரும் பெற்றிடாத அதிக மதிப்பெண் பெற்று (97.4) சாதித்ததோடு 2021கான அப்பல்கலைக்கழக தங்க பதக்கத்தினை பெற்றுக்கொண்டேன்.

பல்வேறு நாடுகளிலிருந்து அங்கு கல்வி பயின்ற மாணவர்கள் மத்தியில் எனது நாட்டினை பிரதிநிதிதுவ படுத்தி 2021 கான சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்டத்தில் பெருமை கொள்கிறேன்.

அத்துடன் இந்தியாவில் இருந்த காலங்களில் இரண்டு வருட கதக் நடன டிப்ளமோ படிப்பினையும் பூர்த்தி செய்துள்ளேன்.

கலையில் பூரணத்துவம் அடைய பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. எனக்கு கலையை கற்க கல்வியே ஊடகமாக திகழ்ந்தது. கலைத்துறையில் இன்னும் இன்னும் கற்கவும் கற்பிக்கவும் ஆவலாக உள்ளேன். நடனத்தில் புதிய பாதைகளை உருவாக்க வேண்டும்,ஒரு ஆற்றுகை கலைஞராக வலம் வர வேண்டும், நிறைய ஆற்றுகை கலைஞர் களை உருவாக்கவேண்டும்,என்பது எனது பெருவிருப்பம்.

எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய வெற்றிமணி பத்திரிகைக்கு மனமார்ந்த நன்றிகள். தங்கள் கனவுகள் நிறைவேற வெற்றிமணி வாழ்த்துகிறது.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உலகில் ஆயுத வியாபாரத்தை மிஞ்சுகிறது

மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை அரசாங்கங்களை பின்னுக்குத்தள்ளி அந்த இடங்களில் அமெரிக்க மாஃபியாக்களுக்கு வேண்டப்பட்ட தனியார் நிறுவனங்களை கொண்டுவருவது என கூறப்படுகிறது .

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட புதிய மருந்துகளை சோதித்துப் பார்க்கும் சோதனைச்சாலைகளாக மூன்றாம் உலக நாடுகளை பில்கேட்ஸ் அறக்கட்டளை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது . காரணம் மேற்கத்தைய நாடுகளில் மனிதர்களின் உடம்பில் மருந்தை செலுத்தி சோதனைகளை மேற்கொள்வதற்கு கட்டுப்பாடுகள் மிகமிக அதிகம் . 2010ஆம் ஆண்டு முதன்முதலில் புதிய மருந்துகளின் சோதனைகளை ஆப்பிரிக்காவில் ஆரம்பித்தது பில்கேட்ஸ் அறக்கட்டளை .

Glaxosmithkline நிறுவனத்தின் மலேரியா தடுப்பூசி ஐய்யாயிரத்துக்கும் அதிகமான ஆபிரிக்க குழந்தைகளின்மீது பரிசோதிக்கப்பட்டது . இந்த சோதனையில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்ததாக சர்ச்சைகள் வெடித்திருந்தாலும் பரிசோதனை மாபெரும் வெற்றிபெற்றதாக பிரசாரம் செய்யப்பட்டது . உலகம் முழுவதிலும் அந்த மருந்தை விநியோகம் செய்யும் உரிமத்தை Gllaxosmithkline நிறுவனத்திற்கு வாங்கிக்கொடுத்து பில்கேட்ஸ் அறக்கட்டளை . புதிய மருந்துகளை பரிசோதித்துப்பார்க்கும் சோதனை எலிகளாக மட்டுமல்லாமல், விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும் மருந்துகளை வியாபாரம் செய்யும் சந்தையாகவும் ஏழை நாடுகளை பில்கேட்ஸ் அறக்கட்டளை பயன்படுத்துகிறது என்கிற விமர்சனமும் உண்டு . இதற்கு உதாரணமாக அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட Norflam எனும் மருந்தை ஆபிரிக்காவில் வியாபாரம் செய்த கதையை சொல்லலாம் . கடுமையான பக்கவிளைவுகளை ஏற்படுத்தியதால் கிட்டத்தட்ட முப்பதாயிரம் பேருக்குமேல் வழக்குத்தொடுக்கப்பட்டதால் அமெரிக்காவால் தடைசெய்யப்பட்ட இந்த மருந்தை ஆபிரிக்க நாடுகளில் பிரச்சாரம் செய்து விற்றுக்கொடுத்தவர் பில்கேட்ஸின் மனைவி மெலிண்டா . சர்வதேச அளவில் பெரும் எதிர்ப்புக்களை சந்தித்த மருந்துகளை ஆப்பிரிக்காவுக்கு அடுத்து அவர்கள் தள்ளிவிடுவது இந்தியாவில்தான் . தனக்குத் தேவையான 80% மருந்துகளை அமேரிக்கா இந்தியா , சீனா போன்ற நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்துகொள்கின்றது . ஆம் , அசைக்கமுடியாத வல்லரசு என மார்தட்டிக்கொள்ளும் அமேரிக்கா தன்னுடைய தேவையில் வெறுமனே 20% மருந்தை மட்டுமே உற்பத்தி செய்கின்றது . உலக மருத்துவ சந்தையில் அசைக்கமுடியாத சக்தியாக இருக்கும் அமேரிக்கா மருந்துகளை தனது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யாததன் பின்னணி என்ன? உலகிலேயே அதிகமான காப்புரிமைகளை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அமெரிக்க நிறுவனங்கள் ஏன் மருந்துகளை உற்பத்தி செய்வதில்லை? காரணம் சுற்றுச்சூழல் சீர்கேடுகள்தான்! எங்கே மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இருந்தாலும் அந்த பகுதியில் உள்ள நிலம் நீர் , காற்று முதலியன மிகவும் மாசடையும் ! சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் மட்டுமல்லாது அந்தப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன் குறைந்துவிடும் என்பது ஆய்வுகளின் முடிவு . சுற்றுச்சூழல் பாதிப்பில்லாமல் மருந்து உற்பத்தி செய்யவேண்டும் என்றால் அதிக செலவும் பிடிக்கும் . மருந்து மாஃபியாக்களைக்கொண்டு உலகையே ஆட்டுவிக்கும் அமேரிக்கா சொந்த நாட்டில் மருந்து தயாரிக்காமல் இருப்பதன் பின்னணி இதுதான் .

என்னதான் ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும் இன்றைய 90% மக்களின் நம்பிக்கையை பெற்ற மருத்துவமுறை என்றால் அது அலோபதிதான் . போலியோ மற்றும் சின்னம்மை இல்லாத உலகை உருவாக்கியதில் அலோபதி மருத்துவத்திற்கு இருக்கும் பங்கை யாரும் மறுத்துவிடவியலாது . ஆனால் அதனை மூலதனமாக கொண்டு மேற்கொள்ளப்படும் மோசடிகள்தான் விமர்சனத்திற்குள்ளாகின்றன . எனினும் முட்டாள்தனமாக அலோபதி மருத்துவமுறையை எதிர்த்து பிரச்சாரம் செய்து மக்களின் உயிருடன் விளையாடும் ஒரு கூட்டமும் இருந்துவருகின்றது காலங்காலமாக . குழந்தைகளுக்கு போடும் தடுப்பூசிகளுக்குக்கூட எதிர்ப்பைக்கட்டுபவர்கள் இவர்கள் . மருத்துவ மாஃபியா என்கிறவொன்று எவ்வளவுக்கெவ்வளவு ஆபத்தானதோ அதைவிட ஆபத்தானவர்கள் இப்படி அலோபதி மருத்துவத்திற்கான எதிர்பிரச்சாரம் செய்பவர்களும் என்பதையும் நாம் கருத்திற்கொள்வது நன்று !



05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வீடு

ஒரு கதையிருக்கும். பயணங்கள், அனுபவங்கள் என கேட்கக் கேட்க தெவிட்டாத கதைகள் அவை.

ஒரு கதையைக் கூடச் சொல்ல முடியாத வீடு எப்படி ஒரு வீடாக இருக்க முடியும்?

எனது கதையையும் எனது தேசத்தின் கதைகளையும் நான் அவர் மூலம் பேசக் கேட்பது எத்தனை இனிமையாக இருந்தது என்பது அனுபவத்திற்தான் தெரிந்து கொள்ள முடியும்.

ஆமைகள் மேல் மிகுந்த பிரியங் கொண்டவர். வீட்டின் பல இடங்கிளிலும் வேலைபாடுகள் நிறைந்த ஆமைப் பொம்மைகள் கலைப் பொருட்களாய் காட்சியளிக்கிறது. ஒவ்வொரு தேசத்திலிருந்தும் கொண்டு வந்த கலைப் பொருட்கள் சுவர்களை நிரப்பி வைத்திருக்கின்றன. கலைந்துகிடப்பதைத் தாண்டி இத்தனை பொருட்களிலும் ஒரு ஒழுங்கும் அழகும் மனஅமைதியும் இருக்கிறது. வீடுகள் வீட்டு மனிதர்களின் தன்மையோடு இருக்கும்போது அந்த வீட்டிற்




கென்றும் ஒரு சுயம் வந்து விடுகிறது. வீட்டு வடிவமைப்பாளர்களின் விளம்பரங்களைப் பின்பற்றும் வீடுகள் தனது ஆத்மாவை இழந்து ஒருவித மாயையைச் சுமந்து பரிதாபமாக இருப்பதாகவே எனக்குத் தெரிகின்றது. சுயத்தைத்தேடத்தொடங்கும் இடமாவும் சரி, தேடியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் இடமாகவும் சரி வீடுகள்தான் இருக்கின்றன.

வீட்டோடான நேசத்தையும், இன்பத்தையும் உணரும் மனது, உலகில் வீடற்ற மனிதர்களை நினைத்துவிடும் பொழுதுகளிலெல்லாம் இனி எழுதுவதற்கு ஒன்றுமில்லை என்று தன் இயக்கத்தை சில நொடி நிறுத்திவிடுகிறது.

21 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## அன்று நான் பார்த்த நந்திக்கடல்!

கிலோமீற்றர் வரை நீந்தக் கற்றுத்தந்தது.எங்களுக்கு நந்திக்கடலில் நீந்தி விளையாட என்றைக்குமே பயம் இருந்ததில்லை.இது எங்கள் கடல்எங்களின் கடல் அன்னை என்று நினைத்ததுண்டு. எங்கள் மீது இதற்குப் பாசம் இருக்குமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை.

நந்திக்கடல் பரந்த பிரதேசம்.மாரி காலங்களில் பல கிலோமீற்றர் வரை தொடர்ந்திருக்கும்.இரைவிழுங்கிய மலைப்பாம்பு போல் உப்பி நீர் நிறைந்திருக்கும்.அப்போது பரந்து விரிந்த அந்தக் கடலைப் பார்க்கவே பயமாக இருக்கும். சோளகக் காற்று சுழன்று வீசும் காலத்தில் அலையெழுந்து வீழும்.காவி நிறத்தில் தண்ணீர் கலங்கி இருக்கும்.இது அந்த நேரத்தில் மாத்திரமே.மற்றும் வேளைகளில் குளம் போல் காட்சி தரும். கீழ்பக்கமாக மாங்குளம் வீதியின் வயல் வெளி கரையோரமாக இரண்டு கிலோமீற்றர் வரை சம புல்வெளி(இந்த வெளியில் தான் மாட்டு வண்டிச்சவாரி பல வருடங்களாக நடைபெற்றது.) அங்கங்கு உடல் வேலை மரங்களும்விடத்தல் மரங்களும் காணப்படும் கரைச்சிக்குடியிருப்புக்கு மேல் வயல் வெளி வட்டுவாகல் வயல்வெளிக்கு மேலாக கரைச்சி வெளிதாண்டி நாங்கள் நீச்சலடிக்கும் கூர்வரை தொடரும் இங்குதான் நந்திக் கடல் முடிவடையும். இதுதான் நாங்கள் நீச்சலடிக்கும் கூர். ஒருபக்கம் கிளை விட்டு மேற்குப் பக்கமாக அளம்வரை நீர் நிறையும்.மாரிகாலத்தில் நீர்நிறைந்து சமுத்திரம் போலக் காட்சி தரும். கோடையில் நீர் வற்றி வெண்மணல் பரப்பியது போல் இருக்கும்.மணல் அதிக ஆழம் என்றில்லை. அடியில் கடாராக இருக்கும். அந்த நேரங்களில் எங்களின் விளையாட்டு மைதானம் இதுதான்.உதைபந்தாட்டம்ஊரின் புதுவருட விளையாட்டுப் போட்டிகள்புதிதாகச் சைக்கிள் பழகுவோர்கார் பழகுவோர் என்று பல வழிகளிலும் இது பயன்படும். அளம் என்ற உப்புச்சேர்ந்த நிலப்பரப்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் உண்டு. நந்திக்கடலோரம் தில்லைநொச்சிமருதொமுள்ளிவாகை என்ற மரங்கள் பச்சைப் பசேலென இந்நந்திக்கடலை எப்போதும் அழகு படுத்தும்.

02 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## ஆசையாக வடிக்கும் மணற் சிற்பங்கள்

நிலையற்றது, என்ற மெய்ஞான விளக்கம் அந்த மணற்சிற்பங்கள் மூலம் போதிக்கப்படுகிறதாம். அது மட்டுமன்றி, இழப்பின் வலியை தாங்கும் வலுவைப் பெறும் வழியையும் அறிந்து கொள்வார்களாம்.

ஒருவன் பிறந்து வளர்ந்து பல தடைகளைத்தாண்டி உயர்வான இடத்தை அடையும் போதும், அந்த மனிதனும் ஒரு மணற்சிற்பம்! எந்த நேரமும் அழியலாம், கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவன் என்ற காரணம் மட்டும் அவனை அழிவில் இருந்து காக்காது, என்ற பேருண்மையை மணற்சிற்பங்கள் விளக்குகின்றன.

துறவறத்தில் உள்ள துறவிகளுக்கு மட்டுமல்லாது, எவர்க்கும், இழப்பைத் தாங்கும் மனதை எப்படி உருவாக்குவது, என்பதனை சிறுவயதிலேயே ‘ஆசையாக வடிக்கும் மணற் சிற்பங்கள், ஆசையை அறுக்கவும், கற்றுத்தருகிறது.

ஒரு கலையானது எமக்கு, இரு செய்திகளைச் சொல்லும், ஒன்று அகம் சார்ந்தும்,மற்றது புறம்சார்ந்தும் இருக்கும் என்பதனை நாம் உணரவேண்டும்.

15 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## ஆயுத வியாபாரிகள் ஆசைப்பட்ட போர்!

இந்தச் சூழலில் சாமர்த்தியமாக இன்னொரு விஷயத்தையும் செய்ய நினைக்கிறது அமெரிக்கா. ஒட்டுமொத்தமாக ரஷ்யாவின் ஆயுத வியாபாரத்தை முடக்கிவிட்டு, அதைத் தன்வசப்படுத்தும் முயற்சியே அது. போர் விமானங்கள், கவச வாகனங்கள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், எலெக்ட்ரானிக் போர் அமைப்புகள், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் போன்றவற்றைச் செய்யும் 22 ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்திருக்கிறது. ‘இனி புதிதாக ஆயுத விற்பனை செய்வதோ, ஏற்கெனவே விற்ற ஆயுதங்களுக்குப் பராமரிப்புப் பணி செய்வதோ இனி இந்த நிறுவனங்களுக்குக் கடினமாக இருக்கும்’ என்கிறது அமெரிக்கா.

ரஷ்யாவுக்குப் பெரும் வருமானத்தைத் தருவது ஆயுத ஏற்றுமதிதான். அவர்கள் பெரிதாக மேற்கத்தியத் தொழில்நுட்பங்களை நம்பி இல்லை. அதனால் இந்தத் தடை தங்களை ஒன்றும் செய்யாது என்கிறார்கள் அவர்கள். தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் அளவுக்கு வலிமையான போர் வாகனங்களைச் செய்வதற்கான மெட்டலர்ஜி நுட்பம், சென்சார் மற்றும் ராடார் தொழில்நுட்பம் போன்றவற்றில் அமெரிக்காவைவிட ரஷ்யா சிறப்பாக உள்ளது. காஷ்மீரின் உறைபனிச் சூழலிலும், அரேபியாவின் தகிக்கும் பாலைவனத்திலும் தடையில்லாமல் இயங்கும். விலையும் குறைவு. அதனாலேயே ரஷ்யப் போர்க்கருவிகள் பலராலும் விரும்பப்படுகின்றன. இந்தியா, சீனா, எகிப்து, அல்ஜீரியா, வியட்நாம், ஈரான், லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை ரஷ்ய ஆயுதங்களை அதிகம் பயன்படுத்துகின்றன.

ரஷ்யாவின் S-400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை இந்தியா வாங்கியுள்ளது. அடுத்து ஏ.கே 203 துப்பாக்கிகளை ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து இந்தியாவில் தயாரிக்கவுள்ளன. உலகின் மிக வேகமான ஏவுகணையாகக் கருதப்படும் இந்தியாவின் பிரமோஸ் ஏவுகணையை மேம்படுத்த ரஷ்யா உதவி செய்யவுள்ளது. அமெரிக்காவின் தடை இந்தத் திட்டங்களை என்ன செய்யப்போகிறது என்று தெரியவில்லை.

இரண்டாம் உலகப்போர் நடந்த நேரத்தில்தான் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெரிய ஆயுத நிறுவனங்கள் உருவாகின. போர் முடிந்ததும் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், ‘எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் பெரும் ஆயுத நிறுவனங்களை வளர்த்துவிட்டோம். அவை அகோரப்பசியுடன் இயங்குகின்றன. முடிவில்லாத போர்களே தங்களுக்குக் கொழுத்த லாபம் கொடுக்கும் என்று அவை நினைக்கின்றன. அவற்றின் அதிகார வேட்டை, ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக மாறும்’ என்று எச்சரித்தார்.

அது நிஜம் என்பதை ஒவ்வொரு போரும் நிரூபிக்கிறது. ■

நன்றி: ஈழநாடு







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# எதிரணியின் 'gotta go home' போராட்டத்தை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது?



அண்மைக்காலத்தில் உருவாகியிருக்கும் உள்கட்சி மோதல்களும், இரண்டு அமைச்சர்கள் பதவிகளிலிருந்து தூக்கப்பட்டமையும் சிங்கள மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. ஜனாதிபதி மீதான அதிருப்தியையும் அதிகரித்திருந்தது. ஆளும் கூட்டணிக்குள்ளேயே ராஜபக்சக்கிள் மீதான அதிருப்தி தீவிரமடைந்திருந்தது. ஆர்ப்பாட்டப்பேரணி வெற்றிகரமாக அமைந்தமைக்கு இவை அனைத்தும் காரணமாக இருந்திருக்கலாம்.

சஜித் பிரேமதாசவைப் பொறுத்தவரையில் இது தனிப்பட்ட முறையிலும் அவருக்கு ஒரு வெற்றி என்று சொல்ல முடியும். காரணம்: சம்பிக்க ரணவக்க உள்ளுக்குள் இருந்துகொண்டே சஜித்துக்கு தொடர்தும் குடைசல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார். ராஜபக்சக்களை எதிர்கொள்வதற்கு அடுத்த



ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைத்தான் களத்தில் இறக்க வேண்டும் என்பதுடன், அதற்குப் பொருத்தமானவர் சம்பிக்க ரணவக்கதான் என ஒரு தரப்பு முயற்சிகளை முன்னெடுக்கின்றது. சம்பிக்க ரணவக்க இதனை இலக்காகக் கொண்டே 43 ஆவது படையணி என்ற அமைப்பையும் உருவாக்கியிருக்கின்றார்.

இந்த நிலையில், ராஜபக்ஷக்களை எதிர்கொள்வதற்கான வல்லமை தனக்குத்தான் இருக்கின்றது என்பதை இந்தப் பேரணியின் மூலம் சஜித் உணர்த்தியிருக்கின்றார். அவரது உரையிலும் அந்தத் தொனியை உணர முடிந்தது. தன்னுடைய ஆளுமையை, தலைமைத்துவத்தை வெளிப்படுத்த இந்தப் பேரணியை சஜித் பயன்படுத்தியிருந்தார். ஆனால், அரசுக்கு எதிரான இந்தப்போராட்டம் இதனுடன் முடிந்துவிடப்போகின்றதா அல்லது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமா என்ற கேள்வி ஒன்றுள்ளது. போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாவிட்டால், அரசாங்கத்துக்கு பாதிப்பு எதுவும் இருக்காது.

ஐக்கிய மக்கள் சக்தி எனது பலத்தை காட்டியிருக்கும் நிலையில் ஜே.வி.பி.யும் தமது பலத்தை வெளிப்படுத்துவதற்காக இவ்வாறான போராட்டம் ஒன்றை வெள்ளிக்கிழமை முன்னெடுத்தது. பேரணிகளை நடத்துவதிலும், அதற்கான ஆட்களைத் திரட்டுவதிலும் ஜே.வி.பி.க்கு நிகராக மற்றொரு கட்சி நிற்க முடியாது. அதனால், மீண்டும் ஒரு முறை ஜே.வி.பி.யினால் கொழும்பு ஸ்தம்பிதமடைந்தது. எதிர்காலத்தில் வேறு சில நகரங்களும் முடக்கப்படலாம்.

ஆனால், இந்தப் பேரணிகளால் மட்டும் அரசாங்கத்தை மாற்றியமைப்பதோ அல்லது அரசாங்கத்தின் போக்கை மாற்றுவதோ சாத்தியமாகப் போவதில்லை. எந்தளவுக்கு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் ஜனாதிபதி வீட்டுக்குச் செல்லப்போவதில்லை. கோட்டாபயவைப் பொறுத்தவரையில் அவருக்கு இன்னும் 3 ஆண்டுகள் உள்ளன. பாராளுமன்றத்தில் கொண்டுவரக்கூடிய குற்றப்பிரேரணை ஒன்றினால் மட்டுமே அவரைப் பதவி விலகச்செய்ய முடியும். ஆனால், அதற்கான சாத்தியம் மிகவும் குறைவு.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தொடரும் நிலையில் பாராளுமன்ற பெரும்பான்மையைக் கைப்பற்றுவதன் மூலம் மட்டும் எதனையும் சாதித்துவிட முடியாது. சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது பிரதமராக இருந்த ரணிலுக்கு நடந்ததும், பின்னர் மைத்திரி ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் பிரதமராக இருந்து தடுமாறியதும் உண்மைக்கால உதாரணங்கள். இதனை சஜித் பிரேமதாசவும் உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது.

அதனால்தான், பாராளுமன்றத்தை இலக்கு வைக்காமல் ஜனாதிபதியை இலக்குவைத்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் அமைந்திருந்தது. ஜனாதிபதி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பது பிரதான கோசமாக முன்னிலைப்படுத்தப்பட்டது அதற்காகத்தான். சஜித் பிரேதாசவும் தனது உரையில் ஜனாதிபதி வீடு செல்ல வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்று முழங்கினார். ஆனால், கோட்டாபய இந்த ஒருநாள் போராட்டத்துக்குப் பயந்து கொண்டு வீட்டுக்குச் செல்லும் ரகம் அல்ல. அதுவும் சஜித்துக்குத் தெரியும்.

அப்படியானால், கட்சிக்குள் தனது பிடியைப் பலப்படுத்துவதற்கும், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்தான்தான் என்பதை உறுதிப்படுத்தவும்தான் இந்த பேரணியை சஜித் ஏற்பாடு செய்திருந்தாரா? அல்லது விரைவில் நடைபெறக்கூடிய மாகாண சபைத் தேர்தல்கள் அல்லது உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக அரசின் மக்கள் செல்வாக்கை ஆட்டங்காணச் செய்வதுதான் அவரது இலக்கா?

எப்படியிருந்தாலும், ராஜபக்சக்களுக்கு சாதகமான ஒரு நிலை இப்போது இல்லை. ஆனால், இதனைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த எதிரணி முற்படும் எனவும் எதிர்பார்க்க முடியாது. தற்போதைய பிரச்சினைகளை தாமே சுமக்க வேண்டிய நிலை இதனால் ஏற்படும் என்ற அச்சம் அவர்களுக்குள்ளமையும் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். ஆனால், அரசின் செல்வாக்கை குறைப்பதும், வரப்போகும் மாகாண, உள்ளூராட்சித் தேர்தல்களுக்குத் தயார்படுத்துவதும் அவர்களது இலக்காக இருக்கலாம்.




சித்திரைப் பெண்ணே
வருடம் ஒரு முறை
வந்து போகிறாய்
நிலையான இன்பம்
தந்து ஏகுவாய்
மனிதம் மண்ணில்
துளிர்க்கட்டும்
உலகம் அன்பால்
நிறையட்டும்

றமணி. சுந்தர். யேர்மனி



Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




* Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main



# கோடிகளைத் தாண்டும் நடிகைகள்
## நயனின் சம்பளம் 10 கோடி

நயன்தாரா சினிமாவில் இருந்து விலகலாம் என 2012 ஆம் ஆண்டு முடிவு செய்து மும்பையிலேயே தங்கி இருந்தார். அப்போது அவரை மறுபடியும் சினிமாவுக்கு தன்னுடைய ராஜா ராணி படத்தின் மூலம் அழைத்து வந்தார்அட்லி . அப்போது இருந்தே அட்லிக்கு நயன்தாரா மேல் பாசமும் அன்பும் இருந்து வருகிறது. இதையடுத்து இப்போது அட்லியின் உதவியாளர் இயக்கும் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த படத்தை டிரைடண்ட் ஆர்ட்ஸ் ரவீந்தரன் தயாரிக்க உள்ளார்.

இந்த படத்துக்காக நயன்தாரா இதுவரை இல்லாத அளவுக்கு சம்பளம் பெற்றுள்ளார். வரிசையாக அவர் நடிக்கும் படங்கள் வெற்றியடைந்து வரும் நிலையில் இந்த படத்துக்கு 10 கோடி ரூபா சம்பளமாக பெற்றுள்ளாராம்.

# சிம்புவுக்கு விரைவில் திருமணம்?



சிம்புவுக்கு அந்த நடிகையுடன் விரைவில் திருமணம் நடக்க உள்ளதாகவும் , திருமணத்திற்கு சிம்புவின் பெற்றோர் பச்சைக்கொடி காட்டி உள்ளதாகவும் இணையத்தில் தகவல் வெளியாகி உள்ளது.

சுசீந்திரன் இயக்கத்தில் கிராமத்து பின்னணியில் ஈஸ்வரன் திரைப்படத்தில் உடல் எடையை குறைத்து ரசிகர்களை மகிழ்வித்தார். மேலும், தீவிர உடற்பயிற்சி செய்து, இனிமேல் சிம்பு அவ்வளவு தான் என்று சொன்னவர்கள் வாய் பிளக்கும் அளவுக்கு சும்மா ஜம்முனு வந்து நின்றார் சிம்பு. வெங்கட் பிரபு இயக்கத்தில் மாநாடு திரைப்படத்தில் மாஸ் காட்டி கலக்கி இருந்தார் சிம்பு.

இந்நிலையில், ஈஸ்வரன் படத்தில் சிம்புவுடன் நடித்த நிதி அகர்வாலை சிம்பு காதலித்து வருவதாக கிசுகிசுக்கப்பட்டு வருகின்றன. வெந்து தணிந்தது காடு மற்றும் பிக்பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில பிஸியாக இருப்பதாகவும், அதேபோல நிதியும் பவன் கல்யாணுடன் ஹரி ஹர வீர மல்லு படத்தில் நடித்து வருகிறார். ஏப்ரல் மாதம் தெலுங்கு படம் வெளியான பிறகு இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# நடிகை ராஷ்மிகா சமந்தாவுடன் சரியான போட்டி



நடிகை ராஷ்மிகாவும் சமந்தாவுடன் போட்டி போட்டுக் கொண்டு தனது சம்பளத்தை உயர்த்தி உள்ளார். தெலுங்கு முன்னணி நடிகையான ராஷ்மிகா மந்தனா. தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என அனைத்து மொழிகளிலும் ரவுண்டு கட்டி நடித்து வருகிறார். கார்த்தியின் 'சுல்தான்' படம் மூலம் தமிழுக்கு வந்தார்.

புஷ்பா அல்லு அர்ஜுன் நடிப்பில் அண்மையில் வெளியான புஷ்பா படத்தில் இடம்பெறும் ஓ சொல்றியா மாமா பாடல் உச்சகட்ட கவர்ச்சியில் சமந்தா ஆடிய நடனம் திரையுலகினரை மட்டுமல்லாது ரசிகர்களையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. இந்த

ஜட்டம் பாடல் பட்டிதொட்டி எங்கும் பட்டையை கிளப்பி வருகிறது. 5 கோடி சம்பளம் இந்தபடத்தில் வரும் 3 நிமிட பாடலுக்காகவே, இப்படத்தை முட்டிமோதி பார்த்தக்கூட்டமும் உண்டு புஷ்பா படத்தில் கதாநாயகியாக நடித்த ராஷ்மிகாவுக்கே அவ்வளவு சம்பளம் இல்லை என்று பரபரப்பாக பேசப்பட்டது.

இதனால்,ராஷ்மிகா நிச்சயமா கடுப்பில் இருந்து இருப்பார் போல, இதனால், ஒரு பாடலுக்கு ஆட, ராஷ்மிகாவை அணுகிய போது, வந்த வாய்ப்பை பக்காவாக பயன்படுத்திக் கொண்டு ஒரே அடியாக சம்பளத்தை உயர்த்தி உள்ளார். இவ்வளவு சம்பளமா ஒரே ஒரு பாடலுக்கு ஆட ராஷ்மிகா, சம்பளமாக ரூ.2 கோடி கேட்டுள்ளார். இது தயாரிப்பாளரை அதிர்ச்சி அடைய வைத்தாலும் அவர் கேட்டதை கொடுத்துவிட்டு ஆட வைக்க இருக்கிறார்களாம். அர்ஜுன் ரெட்டி படத்தை இயக்கிய சந்தீப் ரெட்டி இப்போது அனிமல்' என்ற படத்தை இந்தியில் இயக்கி வருகிறார். அந்த படத்தில் ஆடத்தான் ராஷ்மிகா கோடியில் சம்பளத்தை கேட்டுள்ளார்.




விநாயகா ஜோதிடம்

பண்டித் துர்க்கா பிரசாத்

இந்தியாவின் புகழ் பெற்ற சன்ட பிரசன்ட மார்த்தாண்ட பண்டிதர் சிவாநந்தம் குருக்கள் சுவிஸ் வந்துள்ளார்.

வாழ்வில் நடக்கும் நடக்கபோகும் அத்தனை விஷயங்களையும் எடுத்துரைப்பதில் வல்லவர்.

பிரச்சினை.. பிரச்சினை.. பிரச்சினை.., யாருக்குத்தான் இல்லை பிரச்சினை!!

வந்த பிரச்சினையை தீர்ப்பது எப்படி? இருக்கிறது துன்பத்தை விரட்டுவது எப்படி? யார் நமக்கு எதிரி?, ஏன் இந்த கஷ்டம்? எதற்காக இந்த நஷ்டம்?, நிம்மதி இல்லாமல் எத்தனை காலம் தான் வாழ்வது?

செய்வினையா, பில்லி சூன்யமா, தொழில் வியாபாரம் நஷ்டமா, கணவன் மனைவி சண்டையா, காதல் தோல்வியா, குடும்பத்தில் பிரிவா, இன்னும் திருமணமாகவில்லையா, பேய் பிசாசு தொல்லையா, பிள்ளைகள் பிரச்சினையா, கண் திருஷ்டியா, எதிரிகளின் தொல்லையா?



VINAYAKA JOTHIDAM
MOST POWERFUL SPIRITUALIST FROM INDIA
PANDITH DURAKAPRASANTH
Astrology Prediction is the God's Gift

* Business Investments
*Work Problems
* Money Problems
* Childless couples
* Family Arguments
* Love Problems
* Jealously
* Money Blessing
* Depression
* Drinking Problems
* House Prodction
* Worriad About Loves Ones

100% GUARANTEED RESULTS
LANGUAGE: TAMIL, ENGLISH, HINDI, TELUGU

Praba Supermarket: Hindenburgstraße 212, 41061 Mönchengladbach, Germany

+4915129588372 | +4915213358655


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
சித்திரைப் புத்தாண்டு மலிவு விற்பனை! ஆரம்பம்
திருமண பட்டுப்புடவைகள் புத்தம் புதிய டிசைன்களில் மங்கையர் மனங்கவரும் சேலைகள் சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், குர்த்தாக்கள், இன்னும் இமிற்றேசன் நகைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று மகிழ நாடுங்கள்.
சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம்
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள் வியாழன், சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள் இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் அமைந்த சேலைகள் மற்றும் இமிற்றேசன் நகைகள் அனைத்திற்கும் நீண்ட கால நம்பிக்கை மிக்க ஸ்தாபனம் பிருந்தாஸ்
SALE
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


TTBOX
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
Arabic Song
colors
Polimer
SONY
FURTHER MORE DETAILS CONTACT WITH US
0049 163 000 7800
0044 7523 2323 43
0045 2657 3651
0033 6057 5239 9
0031 6180 20014


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!!! புதிய பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696 | Fax: 0231/8602698